(7) விஞ்ஞானிகள் தங்கள் மதி நுட்பத்தைப்———— உலகமக்கள் துயர்துடைப்பதைத் தங்கள் தலையாய கடமையாக எண்ணி ஆராய்ச்சிப் பணியாற்றி வருகிறார்கள். (பயன்படு)

(8) இத்துறை விஞ்ஞானிகள் விரைவில் வெற்றி பெறுவார்கள் என்றும் நாம் ————. (நம்பு)

(9) புவியும், நிலவும் ஈர்ப்பு விசையால் கட்டுண்டு உள்ளன என்ற உண்மை நியூட்டன் காலந்தொட்டு நமக்குத்————. (தெரி)

14. கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட பகுதிகளை நீக்கிவிட்டு அந்த இடத்தில் தகுந்த வினைச் சொற்களைப் போட்டுக் கேள்வி வாக்கியங்களை அமைத்து எழுதவும்.

(1) இதன் காரணமாகக் குறைகொண்ட இடங்கள் தோன்றுகின்றன.

(2) இங்கு நிகழ்ந்த பூகம்பத்தால் பல்லாயிரக்கணக்கில் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

(3) ஜப்பானில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுகின்றது.

# 7. தமிழ்க் கிளை மொழிகள்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி - ஏ

1. 'நிலை மொழி' என்றால் என்ன?

2. 'கிளை மொழி' என்றால் என்ன?

3. நிலைமொழிக்கும் கிளை மொழிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

4. நிலைக்கிளை மொழி என்றால் என்ன?

5. குலக்கிளை மொழி என்றால் என்ன?

6. டாக்டர் கமீல் சுவலி பீல் அவர்களின் கருத்துப்படி உள்ள கிளை மொழிகள் யாவை?

7. தமிழ்க்கிளை மொழிகளிடையே காணப்படும் வேறுபாடுகளின் தன்மை என்ன?

8. கிளைமொழி ஆராய்ச்சியினால் ஏற்படும் பயன்கள் யாவை?

9. கிளைமொழிகளின் அறிவியல் அடிப்படையான ஆராய்ச்சி முதன் முதலில் எந்தெந்த நாடுகளில் நடைபெற்றன?

10. இலக்கிய வளமற்ற திராவிடமொழிகள் பத்தின் பெயரை எழுதுக.

## பகுதி - பி

11. பகுதி - ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி - பி யுடன் இணைக்கச். சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - எ | | பகுதி - பி |
|---|---|---|
| (அ) முறம் | ( ) | (1) வத்திப்பெட்டி |
| (ஆ) துடைப்பம் | ( ) | (2) காளவாசல் |
| (இ) எண்பது | ( ) | (3) வேர்க்கடலை |
| (ஈ) திருநீறு | ( ) | (4) சுளகு |
| (உ) எண்ணூறு | ( ) | (5) விளக்குமாறு |
| (ஊ) நீற்றை | ( ) | (6) எட்டுநூறு |
| (எ) மணிலாக்கொட்டை | ( ) | (7) எம்பளது |
| (ஏ) தீப்பெட்டி | ( ) | (8) துண்ணூறு |

12. கீழே கொடுத்துள்ள ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.

(1) Social dialect

(2) Regional dialect

(3) idiolect

(4) dialect geography

(5) fertilizer

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தி சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) இலக்கிய வளமற்றமொழி

(2) மொழியியல் அறிஞர்

(3) மேற்போக்காக

(4) திட்டவட்டமாக

(5) சொல்வளம்

(6) தொடரமைப்பு

14) பொருள் மாறாத வகையில் அடிக் கோடிட்டுள்ள சொற்களின் வடிவங்களை மாற்றி வாக்கியத்தையும் மாற்றி எழுதுக.

(1) வழங்கும் நிலத்தானும், குல-இனத்தானும் நிலைமொழியினின்றும் வேறுபட்டுத் தோன்றும் மொழிகளைக் கிளை மொழிகள் என்பர்.

(2) (வல்லின) 'ற' கரம் நாஞ்சில் நாட்டில் மட்டுமே வழக்கிலிருக்க ஏனைத் தமிழகத்தில் அது 'ர' கரமாகவே ஒலிக்கப்பெறுகின்றது.

(3) மறைந்து கிடக்கும் இத்தகைய பெருவாரியான சொற்களை வெளிக்கொணர்ந்தால் வரலாற்று - ஒப்பியல் மொழிநூல் ஆராய்ச்சியாளர்களுக்கு அவை மிகவும் பயன்படும்.

(4) ஈழத்தில் நாம், நாங்கள் என்ற வேறுபாடு இல்லை. இவ்விரண்டையும் நாங்கள் என்ற ஒரு சொல் கொண்டே குறிப்பிடுவர்.

(5) மொழி உரம் பெற இதுபோன்ற சொற்களை எல்லாம் நூல் வடிவிலேனும் போற்றிக்கொள்ளல் வேண்டும்.

(15) பகுதி-ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி-பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - ஏ | பகுதி - பி | |
|---|---|---|
| (1) வரும்பொழுது | (அ) அப்ப | ( ) |
| (2) போகும்பொழுது | (ஆ) இப்ப | ( ) |
| (3) எனது ஊர் | (இ) வரான் | ( ) |
| (4) நடக்கிறது | (ஈ) போகான் | ( ) |
| (5) செய்யமாட்டான் | (உ) அப்ப | ( ) |
| (6) அப்பொழுது | (ஊ) செய்யான் | ( ) |
| (7) இப்பொழுது | (எ) இப்ப | ( ) |
| (8) வரமாட்டான் | (ஏ) வாரப்பொ | ( ) |
| (9) போகமாட்டான் | (ஐ) போரப்பொ | ( ) |
| (10) அங்கே | (ஒ) எனக்க ஊர் | ( ) |
| (11) இங்கே | (ஓ) நடக்கு | ( ) |

(16) பொருள் மாறாத வகையில் வாக்கியத்தை மாற்றி எழுதுக.

(உ-ம்) நான் அந்த மனிதரை அறிவேன்

எனக்கு அந்த மனிதரைத் தெரியும்.

(1) இவ்வாறு வேறுபட்ட மொழிகளுள்ளும் ஒரு பொதுமை காண்கிறோம்.

(2) மலேயாவைச் சேர்ந்த டாக்டர் இராம. சுப்பையா அந் நாட்டுத் தமிழ் கிளை மொழியாராய்ச்சி செய்து நூல் வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

(3) மேற்போக்காக நோக்கினல், சொல்வகையிலோ, பொருள் வகையிலோ, ஒலி வகையிலோ, சொல்லமைப்பு வகையிலொ, தொடரமைப்பு வகையிலோ, தமிழ்க் கிளை மொழிகளிடையே சிறுசிறு வேறுபாடுகள் இருக்கக் காணலாம்.

# 8. மனையியல்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

## கேள்விகள்

### பகுதி - ஏ

1. மனையியல் கருத்துக்கள் எதை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டது?

2. மனையியல் எவைகளை நெறிப்படுத்துகின்றன?

3. மனையியலின் நோக்கம் என்ன ?

4. மனையியல் விரிவுத்துறையின் நோக்கம் என்ன ?

5. மனையியல் கல்வி ஏன் தேவைப்படுகிறது?

6. மனையியல் கல்வி யார் யார் பெற வழி செய்ய வேண்டும்?

7. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

   (1) ஒரு நாட்டின் நலத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ———— களமாக இருந்து வருகிறது. (மனை/கிராமம்)

   (2) மனையும் குடும்பமும்———————————நிலையினை அளக்கும் அளவுகோல்கள் (ஒரு நாட்டின் செல்வ/ஒரு நாட்டின் அரசியல்)

### பகுதி - பி

8. கீழே கொடுத்துள்ள ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.

   (1) **Home Science**

(2) Social Welfare

(3) Patriotism

(4) Integration

(5) Home Science Extension

(6) Competition

(7) Economic Changes

(8) Panchyat

(9) Social Welfar Plans

(10) Duty

9. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

| | | |
|---|---|---|
| (1) பாடத்திட்டங்கள் | ________ | ________ |
| (2) கலையுணர்ச்சி | ________ | ________ |
| (3) மனையியலைப்பற்றி | ________ | ________ |
| (4) கற்றுணர | ________ | ________ |
| (5) பயனற்றவற்றை | ________ | ________ |
| (6) பழங்காலத்து | ________ | ________ |
| (7) மாறியிருக்கிறது | ________ | ________ |
| (8) அனைத்துலகம் | ________ | ________ |
| (9) அடிமையாவதினின்றும் | ________ | ________ |
| (10) வழுவாதிருப்பது | ________ | ________ |

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

(1) விஞ்ஞானம், மானிடக்கலை, நுண்கலை ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, குடும்பத்திலுள்ளவர்களின் உடல், உள்ளம், உணர்ச்சிகளை வளர்

படுத்தி, நெறிப்படுத்தி அவர்கள் வீட்டுக்குச் செய்யவேண்டும் சேவைகளையும் விளக்குகிறது.

(2) இல்லத்திலும் வெளியுலகத்திலும் வாழ்வுடன் சம்பந்தப்பட்டவை அனைத்தையும் குடும்பத்தினர் பயன்படுத்தி நலம் பெறவும், அன்றாட வாழ்க்கையிலுள்ள சிக்கல்களைத் தீர்க்கவும் மனையியல் உதவுகிறது. (இரண்டு வாக்கியங்களாக)

(3) அது குடும்ப உறுப்பினர்களுடைய உடல், உள உணர்ச்சிகளைத் தேவைகளைக் கவனித்துப் பராமரித்து அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துகிறது; குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது; பண்பாட்டை நிர்ணயித்து, அவர்களது குணநலன்களை உருவாக்குகின்றது; தனி மனிதனையும், சமுதாயத்தையும் மலர்வித்து அவர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது.

11. பகுதி-ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி – பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - ஏ | | பகுதி – பி | |
|---|---|---|---|
| (1) குணம் | (அ) | குடும்பத் தலைவிகள் | ( ) |
| (2) உறுப்பினர் | (ஆ) | வாலிபர் | ( ) |
| (3) தாய்க்குலம் | (இ) | ஆண்கள் | ( ) |
| (4) ஆடவர் | (ஈ) | பெண்கள் | ( ) |
| (5) பெண்டிர் | (உ) | பெண்ணினம் | ( ) |
| (6 இளைஞர் | (ஊ) | அங்கத்தினர் | ( ) |
| (7) இல்லத்தலைவியர் | (எ) | கழகம் | ( ) |
| (8) ஆரோக்கியம் | (ஏ) | அறிவியல் | ( ) |

(9) விஞ்ஞானம் (ஐ) பண்பு ( )

(10) சங்கம் (ஒ) உடல்நலம் ( )

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) உணவியல்

(2) கலையுணர்ச்சி

(3) இல்லத்தில் எழில்

(4) மனை நிர்வாகம்

(5) தேசிய ஒருமைப்பாடு

(6) கல்வித் திட்டங்கள்

(7) தொன்றுதொட்டு

# 9. மருத்துவத்தில் பாரம்பரியம்

**பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்**

## பகுதி - எ

1. நோய்கள் கடவுளின் செயல்கள் என்ற கருத்து மறையக் காரணமென்ன?

2. எரித்ரோப்ளாஸ் டோஸ் நோய் தோன்றக் காரணமென்ன?

3. ஹீமோஃபிலியா என்ற நோயினால் உயிருக்கு ஏன் தீங்கு ஏற்படுகிறது?

4. ஹீமோஃபிலியா என்ற நோயை உறுதிப்படுத்தும் ஜீன் எந்த குரோமோசோமில் உள்ளது?

5. நிறக்குருட்டை அறுதியிடும் ஜீன் எந்தக் குரோமோசோமில் உள்ளது?

6. நிறக்குருடு தாயிடமிருந்து மகனுக்கும் தந்தையிடமிருந்து மகளுக்கும் வருவதேன்?

7. ஏன் பெண்களைவிட ஆண்களுக்கே நிறக்குருடு நோய் அதிகம் வருகிறது?

8. பெண்களுக்கு நிறக்குருடு நோய் எப்பொழுது ஏற்படும்?

9. சொந்தத்தில் திருமணம் செய்யாமல் வெளியில் திருமணம் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விக்கும் உரிய விடையைக் கண்டு பிடித்து அந்த விடைக்குமுன் உள்ள உயிரெழுத்தைக் கேள்விக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) இரத்தத்தில் எத்தனை வகைகள் உள்ளன? ( )

(அ) 3 வகைகள்

(ஆ) 4 வகைகள்

(இ) 5 வகைகள்

(ஈ) 6 வகைகள்

(2) "ராஜ நோய் என்றால் என்ன? ( )

(அ) அரசபரம்பரையில் மட்டும் உள்ள நோய்

(ஆ) ஹீமோஃபிலியா

(இ) நோய்களிலேயே மிகவும் கடுமையானது.

(ஈ) எரித்ரோபிளாஸ்டோசிஸ்

(3) மனிதனில் பாலினத்தை (ஆண் அல்லது பெண்) உறுதிப்படுத்தும் இனக்கு ரோமோசோம்கள் யாவை? ( )

(அ) A,B

(ஆ) Rh+, Rh—

(இ) X, y

(ஈ) AB, O

(4) எரித்ரோபிளாஸ்டோசிஸ் குழந்தைகளுக்கு வராமல் எப்படித் தடுக்கலாம்.

(அ) Rh—வகை இரத்தம் கொண்ட பெண் அதேவகை இரத்தம் கொண்டவரை மணம் செய்து கொள்ளவேண்டும்.

(ஆ) Rh — வகை இரத்தம் கொண்ட பெண் அதேவகை இரத்தம் கொண்டவரை மணம் செய்து கொள்ளவேண்டும்'

(இ) Rh— வகை இரத்தம் கொண்ட பெண் வகை இரத்தம் கொண்டவரை மணம் செய்து கொள்ளவேண்டும்.

(ஈ) குழந்தைகளுக்கு முன் ஏற்பாடாக மருந்து கொடுக்கவேண்டும்.

## பகுதி - பி

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பெயர் எச்சத் தொடராக மாற்றுக.

(1) இரத்தச் சிவப்பணுக்கள் உட்கருவைக் கொண்டிருந்தன.

(2) நிறக்குருடு போன்று தலைவழுக்கையும் பாரம்பரியமாகப் பரவுகின்றது.

12. அடைப்புக்குறிக்குள் கொடுததுள்ள சொல்லை வாக்கியத்திற்குத் தகுந்தாற்போல மாற்றி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

(1) இக் கண்டுபிடிப்புக்களாம் ——— செயல்பட்டால் பல நோய்களைத் தடுக்கலாம். (முன்னறிவு)

(2) உடன் பிறந்த ஆணும் பெண்ணும் தங்கள் குழந்தைகளுக்கு ——— மாற்றி மாற்றித் திருமணம் செய்து வைப்பதை விடுத்து அந்நிய உறவில் திருமணம் செய்வதையோ அல்லது கலப்பு மணங்கள் செய்வதையோ பின்பற்றினால் அந் நோயை உலகை விட்டே விரட்டி விடலாம். (அவர்கள்)

(3) அவர்கள் இவற்றைப் பற்றி நன்கு சிந்தித்து, இக் குறையில்லாத குடும்பங்களில் மணம் செய்துகொண்டால் படிப்படியாக இக் குறையைத் தாங்கள் ———இல்லாது செய்யலாம். (பிறப்புக்கள்)

(4) ஆனால் அவைகள் எவ்வளவு——— என்பது கேள்விக் குறியே. (பயனளி)

13. கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட பகுதிகளை நீக்கிவிட்டு அந்த இடத்தில் தகுந்த வினைச் சொற்களைப் போட்டுக் கேள்வி வாக்கியங்களை அமைத்து எழுதவும்.

(1) அண்மைக் காலத்தில் வியக்கத்தக்க வகையில் நோய்கள் தோன்றுவதை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

(2) ஆனால் உண்மை நேர்மாறாக இருப்பது அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.

(3) நிறக்குருடு போன்றே தலைவழுக்கையும் பாரம்பரியமாகப் பரவுகின்றது.

(4) இதுபோன்றே நீரிழிவு நோய், சோகை, புற்று நோய்கள், இரத்தக்குறை பாடுகள் போன்றவை பாரம்பரியமாகப் பரவுவதாகக் கண்டுபிடித்துள்ளார்ன.

# 10. மொகலாயப் படையெடுப்பின்பொழுது இந்தியாவின் நிலை

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்.

## பகுதி - எ

1. மொகலாயர்கள் இந்தியாவின்மேல் படையெடுத்தபோது இந்திய அரசியல்நிலை எப்படி இருந்தது?

2. பாபர் படையெடுப்பின் போது லோடிப் பேரரசு எதனால் சீர்குலைந்து இருந்தது?

3. இராசபுதன அரசு ஏன் வலிமை வாய்ந்ததாக இல்லை?

4. பாமினி சுல்தானியம் ஏன் வலிமை இழந்தது?

5. விசயநகரப் பேரரசு எப்பொழுது சிதறுண்டது?

6. இந்துமுஸ்லீம் ஒற்றுமை எப்படி இருந்தது?

7. மொகலாயர்களின் படையெடுப்பின்போது இந்தியாவின் பொருளாதார நிலை எப்படியிருந்தது?

8. மொகலாயர்கள் படையெடுப்பின்போது இந்தியப் படைவலிமை எப்படி இருந்தது?

9. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) வடமேற்கு எல்லைப் பகுதியிலிருந்து துணிகர வீரர்கள் இந்து மாநிலங்களுக்கு வருவதை நிறுத்திக்கொண்டதனால், வங்காளம், மாளவம், குஜராத் ஆகிய முஸ்லீம் அரசுகளிலிருந்த முஸ்லீம்களின் வாழ்க்கை மேலும் மேலும் இந்திய மயமாகிக் கொண்டிருந்தது. ஆகவே இப்பகுதிகளிலெல்லாம் மக்கள் ———— பற்று உடையவர்களாக இருந்தார்களேயன்றி, இந்துஸ்தானத்தில் இருந்த மற்ற அரசுகளின் மீது பற்று கொண்டிருக்கவில்லை. (மாநிலப்/மதப்)

(2) இராசபுத்திரர்கள் நாடுமுழுவதின்மீதும் ———— மிகவும் வருந்ததக்கதாகும். (பற்று கொண்டிராதது/ஆதிக்கம் கொண்டிராதது)

(3) பெரும்பாலான மக்களாக இருந்த இந்துக்கள் பலர் ———— மூழ்கிக்கிடந்தனர் (சுகபோகத்தில்/வறுமையில்)

(4) பதினாறும் நூற்றாண்டில் இந்தியாவில் பலம்வாய்ந்த படை ————, (இருந்தது/இல்லை)

## பகுதி—பி

11. ஒரே இனமான சொற்களை மாத்திரம் அடிக்கோடிடுக.

(உ-ம்) உலோகம் : தண்ணீர், செம்பு, உறீலியம், சோடியம், எலக்டிரான்.

இராச்சியங்கள்: பஞ்சாப், லக்னோ, ஜான்பூர், பிகார், பிஜப்பூர், கோல்கொண்டா, பீடார், அகமத்நகர், பீரார் லாகூர், வங்காளம், காஷ்மீர், பாபர், டில்லி, மதுரை.
அரசர் பெயர் : கடல், போர்ச்சுக்கிசீயர்கள், அரசர் பாபர், இந்துக்கள், இப்ரகிம் லோடி வமிசம், ஜெய்னுலாப்தீன், உறீஸேன்ஷா, யானைப்படை.

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) நடவடிக்கை

(2) முக்கியத்துவம்

(3) மாநிலப்பற்று

(4) உயர்குடியினர்

(5) நல்லெண்ணம்

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைச் சிறுசிறு வாக்கியங்களாப் பிரித்தெழுதுக.

(1) உறுதியான மைய அரசாங்கமோ, அரசியல் ஒற்றுமையோ கிடையாது; ஒவ்வொரு பகுதியும் மற்றப்பகுதிகளின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தது; வாய்ப்புக் கிட்டியபோது அவற்றின்மீது பாய்ந்து தன்னைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தது.

(2) மாநிலங்களில் தம் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் அல்லாவுத்தீன் கில்ஜி சிறப்பான வெற்றியைப் பெற்றார் எனினும், முகம்மது பின் துக்ளக்கின் ஆட்சியில் அந்த மாநிலங்கள் விடுதலை அடைந்துகொண்டிருந்தன. (இரண்டு வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக).

(3) வடமேற்கு எல்லைப் பகுதியிலிருந்து துணிகர வீரர்கள் இந்து மாநிலங்களுக்கு வருவதை நிறுத்திக்கொண்டதனால் முஸ்லிம்களின் வாழ்க்கை மேலும் மேலும் இந்தியமயமாகிக்கொண்டிருந்தது. (இரண்டு வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.)

(4) அந்நியப் பகைவனை எதிர்த்து விரட்டியடிப்பதற்காக இராசபுத்திரர்கள் தற்காலிகமாக ஒன்று சேரக்கூடும்; ஆனாலும் அவர்களுக்கிடையே இருந்துவந்த சச்சரவுகளும் குடும்பப் பொறாமையும் அவர்களை நிரந்தரமாக ஒன்றாக இணைய அனுமதிக்கவில்லை. (இரண்டு வாக்கியங்களில்)

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) பன்னெடுங்காலமாக = ______ ______

(2) சமூக நிலை = ______ ______

(3) தென்னிந்தியா = ______ ______

(4) இராச்சியங்களாக = ______ ______

(5) வலிமைமிகுந்த = ______ ______

(6) புகமுடிந்தது = ______ ______

(7) பற்றுக்கொண்டிராதது = ______ ______

(8) அவர்களுக்கிடையே = ______ ______

(9) பற்றுக்கொண்டிருக்கவில்லை = ______ ______

15. கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட சொல் அல்லது சொற்களை நீக்கிவிட்டு அந்த இடங்களில் தகுந்த வினாச்சொற்களைப் போட்டுக் கேள்வி வாக்கியங்களாக மாற்றவும்.

(1) மற்ற இரண்டு பகுதிகளும் <u>தென்னிந்தியாவில்</u> இருந்தன.

(2) பாபர் 1526இல் நடந்த முதல் பானிப்பட்டுப் போரில் <u>இப்ராகிம்லோடியைத்</u> தோற்கடித்துக் கொன்றார்.

(3) ஆக்ரா, குவாலியர், டெல்லி ஆகிய இடங்களில் பாபர் <u>ஏராளமான செல்வத்தைப்</u> பெற்றார்.

# 11. தமிழிலக்கணமும் கற்பனையும்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி - எ

1. தொல்காப்பியர் கூறும் வழக்கின் மூன்று வகைகள் யாவை?

2. நாடகத்தின் இயல்பு என்ன?

3. புலனெறி வழக்கம் என்பது என்ன?

4. 'அணி' என்றால் என்ன?

5. அணி இலக்கணத்திற்கு முதுகெலும்பாகக் கருதப்படுவது எது?

6. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?

7. உயர்வு நவிற்சி அணியை விளக்குக.

8. 'பொய்'க்கும் 'கற்பனை'க்கும் உள்ள வேறுபாடு யாது?

9. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) சமுதாயத்தின் ———————— துணையாக இருப்பது வழக்கம். (கட்டுக்கோப்பிற்கு/முன்னேற்றத்திற்கு)

(2) மக்கள் வாழ்க்கையில் ————— பெற உதவுவது வழக்கம். (மனநிறைவைப்/புத்துணர்ச்சியைப்)

(3) பன்னெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்துவரும் சிறந்த ————— வழக்கம். (நெறியே/நியதியே.)

(4) பாட்டுக்கு உடையாக விளங்கும் கற்பனைத் திறனிலிருந்தே ————— பல தோன்றியுள்ளன. (அணிகள்/வழக்கங்கள்)

## பகுதி - பி

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினைச் சொற்களைப் பெயர்ச் சொற்களாக மாற்றுக.

(1) பெறு : ————

(2) வடி : ————

(3) தொடு : ————

(4) நிகழ் : ————

(5) புனை : ————

(6) உயர் : ————

(7) தெளி : ————

(8) கவர் : ————

(9) படை : ————

(10) நிலை : ————

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

(1) பொதுவாகப் பொருள் இலக்கணத்திலும் சிறப்பாக அணியிலக்கணத்திலும் கற்பனையைப் பற்றிய அரிய கருத்துக்கள் சிலவற்றை நாம் காணலாம். (இரண்டு வாக்கியங்களாக)

(2) எனவே 'கற்பனை' என்னும் சொல்லால் நாம் உணர்த்தும் பொருளினை நம்முடைய முன்னோர் நன்குணர்ந்திருந்ததோடு, அந்த இலக்கியத்திறனை நன்கு போற்றி வளர்த்தும் உள்ளனர் என்பது தெளிவாகிறது. (இரண்டு வாக்கியங்களாக)

12. சொற்களை முழுமையாக்கச் செவ்வகக் கட்டத்தில் கொடுத்துள்ள எழுத்துக்களிலிருந்து சரியான எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

| |
|---|
| ழ, ல, ள, ர், ற், ன, ண, ந, மை, ஞ |

(1) பு——னெறி

(2) வ——க்கம்

(3) வி——ங்கும்

(4) கவ——ச்சி

(5) முடிவி——கு

(6) இலக்க——ம்

(7) பேசுகின்ற——

(8) ——யம்

(9) அ——வது

(10) புல——கின்றது

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) வனப்பு

(2) வழக்கம்

(3) இலக்கண நூலார்

(4) கற்பனை

(5) அணி

# 12. இந்தியாவில் வேலையின்மை

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி – ஏ

1. வேலையின்மை பொருளாதார அமைப்பில் விரயம் என ஏன் கருதப்படுகிறது?

2. 'சோம்பிய மனது, சாத்தானின் உறைவிடம்' என ஏன் கருதப்படுகிறது?

3. வேலையின்றி இருக்கும் ஒருவருக்கு வருமானம் இல்லாததால், அவருடைய தேவைகள் அவரை எப்படிச் செயல்படுத்துகின்றன?

4. மக்கள் தொகைப் பெருக்கம் எவ்வாறு வேலையின்மைக்குக் காரணமாகிறது?

5. வேளாண்மைத் துறையில் ஏன் வேலையின்மை தோன்றியது?

6. வேலையின்மையை எந்த இரண்டு கோணங்களிலிருந்து பார்க்கவேண்டும்?

7. புதிதாக வேலையின்றி இருக்கப்போகிறவர்கள் யார் யார்?

8. 'கரந்த வேலையின்மை' என்றால் என்ன?

9. ஏன் திட்டமிட்ட தொழில்துறை தேவை?

10. நவீன இயந்திரங்களைப் புகுத்துவதால் ஏற்படும் பிரச்சனை என்ன?

11. பருவங்களை நம்பும் தொழில்களால் ஏற்படும் பிரச்சனை என்ன?

12. முதல் மூன்று திட்டங்களின் முடிவில் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருந்தனர்?

13. வேலைவாய்ப்பகங்கள் எவ்வாறு வேலையின்மையைப் போக்கப் பணிபுரியலாம்?

14. வேலையின்மையை எவ்வாறு தவிர்க்கலாம்?

15. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) பொருளாதார நோய்களுள் தவிர்க்கமுடியாததும் ஆனால் தீர்த்துக்கொள்ளக் கூடியதுமான ஒன்று——————ஆகும்.

(2) வளர்ந்து வரும் மக்கள் தொகை அனைத்திற்கும் ஏற்ற பல்வேறு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பது——————

(3) பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவது——————உருவாக்குதற்கு மறுபெயரே.

(4) முதல் திட்ட காலத்தில் பெருகிய மக்கட் தொகையில் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் போக ——————மில்லியன் பேர் வேலை இல்லாமல் இருந்தனர்.

(5) இரண்டாம் திட்ட காலத்தில்கூட, —————— வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க இயலவில்லை.

(எல்லோருக்கும், 26, பொருளாதாரப் புரட்சி, வேலையின்மை, எளிதான காரியமே, வேலை வாய்ப்பினை, எளிதான காரியம் அல்ல, எண்ணியவாறு)

16. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விக்கும் உரிய விடையைக் கண்டுபிடித்து அந்த விடைக்கு முன் உள்ள உயிரெழுத்தைக் கேள்விக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) வேலையின்மை என்றால் என்ன? ( )

(அ) எந்த வேலையும் இல்லாமை

(ஆ) திறனுக்கேற்ற வேலை இன்மை

(இ) சோம்பேறித்தனத்திற்கு மறுபெயர்

(ஈ) போதுமான வருமானம் இல்லாமை

(2) தற்காலத்தில் வேலையின்மை யாருடைய தவறால் ஏற்படுகிறது? ( )

(அ) பெற்றோர்கள்

(ஆ) கல்வி

(இ) விதி

(ஈ) அரசாங்கம்

(3) கைவினைஞர்களுக்கு வேலையின்மைப் பிரச்சனைத் தோன்றியதற்குக் காரணமென்ன? ( )

(அ) அவர்களுக்குப் போதிய கல்வி இல்லாமை

(ஆ) அவர்களுக்குப் போதிய முதலீடு இல்லாமை

(இ) நவீன இயந்திரத் தொழிலின் ஆதிக்கம்

(ஈ) அரசாங்கத்தின் ஆதரவு இன்மை

## பகுதி – பி

17. பொருள் மாறுதவகையில் அடிக்கோடிட்டுள்ள சொற்களின் வடிவங்களை மாற்றி வாக்கியத்தை எழுதுக.

(1) எனினும் இந்தியத் திட்ட ஆணைக் குழு சில முக்கியமான காரணங்களை <u>எடுத்தியம்பி</u> அவற்றினைச் சரிசெய்ய முனைந்தது.

(2) அதன் கருத்துப்படி வேலையின்மைக்கு முழு முதற் காரணம் வெகு வேகமாக வளர்ந்துவரும் <u>மக்கட் தொகைப்</u> பிரச்சினையே.

(3) நமது <u>மக்கள் தொகை</u> வளர்ந்துவரும் வேகத்தில் நமது பொருளாதாரம் வளரவில்லை.

(4) இதனால் வேலையிழந்த கைவினைஞர்களும் <u>வேலையின்மைப்</u> பிரச்சினையைப் பெருக்கிவிட்டனர்.

(5) எனவே இரண்டாம் திட்டக் காலத்தில் 15.3 மில்லியன் பேருக்கு வேலை <u>வாய்ப்பினை</u> ஏற்படுத்திக் கொடுக்கத் திட்ட ஆலோசனைக் குழு முனைந்தது.

(6) வேலையை நாடிவர வேளாண்மை துறையிலுள்ள பெரும்பான்மையினர் <u>விரும்பாதபோழ்து</u> அவரைத் தேடி வேலை வாய்ப்புச் செல்வதே முறை.

18. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) கைவினைஞர்கள்

(2) அத்துணையளவு

(3) தீராத தலைவலி

(4) குடிசைத் தொழில்கள்

(5) பரிந்துரை

(6) சோஷலிசபாணிச் சமுதாயம்

(7) நுகர்வுநாட்டம்

19. அடிக்கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் வேறுபாடு உண்டாகாத வகையில் வேறு சொற்களை எழுதுக.

(1) அதனால்தான் சோஷலிசபாணிச் சமுதாயத்தை உருவாக்க விழையும் இந்தியப் பேரரசும் தனது திட்டங்கள் மூலம் மேலும் மேலும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கி வருகின்றது.

(2) அதனால்தான் தற்காலத்தில் அரசுகள் அனைத்தும் திட்டமிட்டு வேளாண்மையைப் பெருக்குவதன் மூலமும் தொழில்களைப் பெருக்குவதன் மூலமும், பிறதுறைகளை வளர்ப்பதன் மூலமும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான 'முழுவேலை வாய்ப்பினை' ஏற்படுத்த முனைகின்றனர், அதில் வெற்றியும் பெறுகின்றனர்.

(3) இரண்டாவதாக, பழங்காலத்தில் பலபேருக்குக் குறைந்த அளவாவது வேலை வாய்ப்புக் கொடுத்துவந்த பல்வகை கிராமக் கைத்தொழில்கள் நலிந்துபோயின.

(4) மூன்றாவதாக வேளாண்மைத் துறையல்லாத இதரத் துறைகளும் அத்துணையளவு வளர்ச்சி அடையவில்லை.

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) வேலை | + | இன்மை | = | |
| (2) கைவினை | + | பண்டங்கள் | = | |
| (3) வாய்ப்பு | + | கிடைக்கும் | = | |
| (4) வேர் | + | ஊன்று | = | |
| (5) உருவு | + | எடுத்து | = | |
| (6) எடுத்து | + | இயம்பு | = | |
| (7) பொது | + | கல்வி | = | |
| (8) ஆலோசனை | + | குழு | = | |
| (9) பொது | + | துறை | = | |

# 13. தரநிர்ணய முத்திரை

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி—எ

1. இந்தியத் தரநிர்ணய நிறுவனம் தோன்றுவதற்குக் காரணமென்ன?

2. இந்தியத் தரநிர்ணய நிறுவனம் எந்த ஆண்டு தோன்றியது?

3. இந்தியத் தரநிர்ணய நிறுவனம் எப்படி நிருவகிக்கப்படுகிறது?

4. தரத்தை நிர்ணயிக்கும் முறை எப்படி உருவாக்கப்படுகிறது?

5. தரநிர்ணயக் குறிப்புகளின் பயன் என்ன?

6. தரநிர்ணய முத்திரை அளிக்கப்படுமுன் கடைபிடிக்கப்படும் நியதிகள் யாவை?

7. தரநிர்ணய முத்திரைக்கு அனுமதி அளித்தபிறகு, தரத்தைக் காப்பாற்ற இந்த நிறுவனம் எப்படிச் செயல்படுகிறது?

8. அகில உலகச் சந்தையில் இந்தியப் பொருள்கள் விலைபோக, இந்த நிறுவனம் எப்படிச் செயல்படுகிறது?

9. தரநிர்ணய முத்திரை இல்லாமல் இன்று இந்தியாவில் பொருள்களை தயாரிக்க முடியுமா?

10. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) தரமான பொருள்களைப் பரிசோதித்து அவை தரமானவை என்று நிர்ணயப்படுத்தும் ———————— முத்திரை அந்தப் பொருள்களின்மேல் இருக்கிறது. (ISI/SII)

(2) இனிக்க இனிக்கப் பேசி நம் உள்ளத்தைக் கவர்ந்து, உயர்ந்தது என்று சொல்லி ———————— பொருள்களை நம் தலையில் கட்டிவிடும் சாமர்த்தியமான கடைக்காரர்கள் பலர் இருக்கின்றனர். (குப்பையான/கவர்ச்சியான)

## பகுதி—பி

11. கீழே கொடுத்துள்ள வாக்கியங்களில் உள்ள ஒருமையைப் பன்மையாக மாற்றி வாக்கியத்தை எழுதுக.

(1) பொருள்களின் தரத்தைப் பற்றிய உபயோகமான குறிப்புகளைத் தொழிற்சாலைகளுக்குத் தெரிவிக்கிறது.

(2) அன்றாட அலுவல்களைக் கவனிக்க ஒரு செயற்குழு இயங்கி வருகிறது.

(3) பொருள்களின் தரங்களை நிர்ணயிக்க இந்த நிறுவனம் பலவழிகளைக் கையாளுகிறது.

(4) நிதிசம்பந்தமான ஆலோசனைகளை இதற்கு நல்க நிதிக்குழு ஒன்று உள்ளது.

(5) அவ்வாறு இல்லாவிட்டால் தொழிற்சாலைகளுக்குக் கொடுத்த அனுமதிச் சீட்டு களைத் திரும்பப் பெறவும் இந்த நிறுவனம் அதிகாரம் பெற்றிருக்கிறது.

(12) அடிக்கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் வேறுபாடு உண்டா காத வகையில் வேறு சொற்களை இட்டு எழுதுக.

(1) இத்தகைய குறிப்புகள் தரமான பொருள்களைத் தயாரிக்க விழையும் தயாரிப் பாளர்களுக்குப் பெரிதும் உதவுகின்றன.

(2) நீதி சம்பந்தமான ஆலோசனைகளை இதற்கு நல்க நிதிக்குழு ஒன்று உள்ளது.

(3) 1946ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தியப் பொருள்களின் தரத்தை எடைபோட எவ்வித வழியும் தோன்றவில்லை.

(4) 'இந்திய-தரநிர்ணய நிறுவனம்' என்னும் சுருக்கெழுத்தால் பிரபலமாகியுள்ள இந்த நிறுவனம் புதுடில்லியில் இயங்கி வருகிறது.

(5) பொருள்களின் தரத்தைப் பற்றிய உபயோகமான குறிப்புகளைத் தொழிற்சாலை களுக்குத் தெரிவிக்கிறது.

# 14. கம்ப்யூட்டர்

**பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்**

## கேள்விகள்

### பகுதி-ஏ

1. முதன் முதலில் கம்ப்யூட்டர் பற்றி எண்ணியவர் யார்?

2. முதல் டிஜிடால் கம்ப்யூட்டரைக் கண்டுபிடித்தவர் யார்?

3. கம்ப்யூட்டரில் நினைவுப் பகுதியின் நன்மை என்ன?

4. கம்ப்யூட்டருக்கு எப்படிக் கட்டளையிடப்படுகிறது?

5. கம்ப்யூட்டர் முடிவுகளை எப்படி வெளியிடுகிறது?

6. அனலாக் கம்ப்யூட்டர் இயந்திரத்தில் எப்படிக் கட்டளை இடப்படுகிறது? அது எப்படி முடிவுகளை வெளியிடுகிறது?

7. கம்ப்யூட்டர் என்னென்ன அலுவலக வேலைகளைச் செய்கிறது?

8. கம்ப்யூட்டர் பாதுகாப்புத் துறையில் எவ்வாறு பயன்படுகிறது?

9. கம்ப்யூட்டர் கட்டட வேலைகளில் எவ்வாறு பயன்படுகிறது?

10. கம்ப்யூட்டரால் செஸ் விளையாட முடியுமா?

11. கம்ப்யூட்டர் மொழியியல் துறையில் எவ்வாறு பயன்படுகிறது?

### பகுதி - பி

12. பகுதி—எயில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி—பியுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி—எ | பகுதி - பி | |
|---|---|---|
| (1) Memory or Storage Unit | (அ) கணக்கீட்டுப் பொறி | ( ) |
| (2) Calculators | (ஆ) கேதோடு அலை | ( ) |
| (3) Inner memory | (இ) முக்கியப்பகுதி நினைவு அல்லது சேமிப்புப்பகுதி | ( ) |
| (4) External memory | (ஈ) இயந்திர விமான ஓட்டி | ( ) |
| (5) Working memory | (உ) காந்த நினைவு | ( ) |
| (6) Mercury memory | (ஊ) அனிச்சை நினைவு | ( ) |
| (7) Magnetic arc memory | (எ) நடப்பியல் நினைவு | ( ) |
| (8) Cathode Ray | (ஏ) புற நினைவு | ( ) |
| (9) Machine pilot | (ஐ) நினைவுப்பிரிவு | ( ) |
| (10) Memory Unit | (ஒ) அக நினைவு | ( ) |

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) கண்ட கனவு

(2) நுண்ணிய முறையில்

(3) அறிவியல் முன்னேற்றம்

(4) புள்ளி விவரங்கள்

(5) கணக்கிட்டுப் பொறி

14. அடிக்கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் வேறுபாடு உண்டாகாத வகையில் வேறு சொற்களை எழுதுக.

(1) இதேபோல் அலுவலக வேலைகளைச் செய்யவும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(2) சில மனோதத்துவ விளக்கங்களையும் எழுத்துக்களால் எழுதுவதுபோல் கணிதக்குறிகளால் எழுதமுடியும்.

(3) அதற்குக் கணிதத்தில் தேர்ச்சி இருத்தல் அவசியம்.

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) கணக்கிட்டுப்பொறி

(2) எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர்

(3) வெறுப்புணர்ச்சி

(4) கம்ப்யூட்டரிடம்

(5) தீயணைத்தல்

(6) உடற்கூறு

(7) இவ்வியந்திரம்

(8) நீர்க்கசிவுகளை

16. கீழே கொடுத்துள்ள வாக்கியங்களின் வினைமுடிவுகளைப் படுவினைமுடிவாக மாற்றி எழுதுக.

(1) செவ்வாய்க் கிரகத்தை நோக்கிச் செல்லும் ராக்கட்டின் வேகத்தைக் கட்டுப் படுத்தவும், அதன் பாதையை, தூரத்தைக் கணக்கிடவும் கம்ப்யூட்டர்கள் பயன்படுகின்றன.

(2) இவ்வியந்திரம் எண்மானங்களால் இயங்குகிறது.

(3) —6 என்ற அனலாக் கம்ப்யூட்டர் பிரம்மாண்டமான 50, 60 மாடிக்கட்டிடங் களின் அடிவாரத்தின் உறுதியையும், நிர்மாண வேலைகளில் கட்டிடங்களின் பலத்தையும் அறியப் பயன்படுகிறது.

# 15. பணம்

பாடக்குறிப்புக்களை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி - ஏ

1. பண்டமாற்று என்றால் என்ன ?

2. பணத்தின் இலக்கணம் என்ன ?

3. பணம் ஒரு மாற்று மத்திமமாக எப்படி பணியாற்றுகிறது ?

4. பல பண்டங்களின் மதிப்பை எப்படிப் ஒப்பிடுகிறோம் ?

5. எந்தச் சூழ்நிலையில் பொருள்களை எவரும் கடனுக்குக் கொடுக்க முன்வரமாட்டார்கள்?

6. பணத்தை ஏன் மதிப்பின் நிலைக்களன் என்று கூறுகிறோம் ?

7. உற்பத்தியாளர்களுடைய உழைப்பின் பயன், அவர்களுக்கு எதன் மூலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது ?

8. பொருளின் இறுதிநிலைப் பயன்பாட்டை அளந்து அறிவது, எப்படிப் பொருளை உச்ச அளவில் உற்பத்தி செய்ய உதவுகிறது ?

9. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) ஆதி மனிதனின் வாணிபம் முழுவதும்——————நிகழ்ந்தது.

(2) பண்டமாற்று முறையில் இரண்டு விருப்பங்களின் சந்திப்பு —————— வேண்டும். இவ்விரண்டும் பொருந்தா நிலையில் இருந்தால் பண்டமாற்று ——————. ஆகவே, இதனை பண்டமாற்று முறையின் —————— எனலாம்.

(3) பண்டமாற்று முறையில் பண்டங்களின் மதிப்பைப் பொது அளவுகோல் கொண்டு அளக்க——————ஒரு ஆட்டுக்கும், ஒரு மாட்டுக்கும், ஒரு வேட்டிக்கும் உள்ள மாற்று மதிப்பை நிர்ணயிப்பது——————.

(4) பொறித் துறையில் சக்கரமும், விஞ்ஞானத்தில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புகளாக இருப்பவை போன்று வாணிகத் துறையில்——————ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும்.

[பண்டமாற்றாகவே, பெருங்குறை, வழியுண்டு, பணம், சிறப்பாகவே, சிறப்பு, வழியில்லை, பண்டமாற்று.]

## பகுதி - பி

10. பகுதி - ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி பி-யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - ஏ | பகுதி - பி | |
|---|---|---|
| (1) Graftsman | (அ) மதிப்பைப் பொது அளவுகோல் | ( ) |
| (2) Exchange | (ஆ) விருப்பங்கள் இரண்டின் சந்திப்பு | ( ) |
| (3) Medium of exchange | (இ) மாற்று | ( ) |
| (4) Measure of value | (ஈ) தொழில் வினைஞன் | ( ) |
| (5) Standard of deferred payment | (உ) மாற்று மத்திமமாக | ( ) |
| (6) Transfer of value | (ஊ) மதிப்பளவையாக | ( ) |
| (7) Store of value | (எ) பணம் பின்னர் செலுத்தப்படும் கடன்களுக்கு ஒரு தருக்கோல் | ( ) |
| (8) Double concidence of wants | (ஏ) மதிப்பு நிலைக்களன் | ( ) |
| (9) Common measure of values | (ஐ) பண்டங்களின் மதிப்பு | ( ) |

11. அடிக் கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் வேறுபாடு உண்டாகாத வகையில் வேறு சொற்களை எழுதுக.

(1) வேடன் தன் வசமுள்ள பச்சைத் தோல், இறைச்சி முதலியவற்றை உழவனுக்குப் பரிவர்த்தனை செய்து தானியம், வைக்கோல் முதலானவற்றைப் பெற்றான்.

(2) இதுபோன்று ஒருவர் தான் புரியும் பணிகளுக்கு ஊதியமாகப் பணத்தைப் பெறலாம்.

(3) தொழிலாளிகள், நிலக்கிழார்கள், முதலாளிகள், முயல்வோர் ஆகியோர் கூட்டுறவு இல்லாமல் நவீன உற்பத்தி செழித்தோங்காது.

(4) சமூக அல்லது நாட்டு வருவாயை உற்பத்திக் காரணியாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குப் பணம் வழிவகை செய்கிறது.

12. பொருள் மாறாத வகையில் அடிக்கோடிட்டுள்ள சொற்களின் வடிவங்களை மாற்றுக. பின் வாக்கியத்தை மாற்றி எழுதுக.

(1) பண்ட மாற்று முறையில் இரண்டு விருப்பங்களின் சந்திப்பு நிகழ்தல் வேண்டும்.

(2) கடனைத் திருப்பிப் பெறும்பொழுது பணத்தின் மதிப்பு குறைந்து போகும் என்றுணர்ந்தால் எவரும் கடன் கொடுக்க முன்வரமாட்டாததால் பணம் பின்னர் செலுத்தப்படும் கடன்களுக்கு ஒரு தரக்கோலாக அமைந்துள்ளது.

(3) பலவிதமான செல்வங்களைப் பணம் ஒரே தன்மையதாகவும் எளிதில் மாற்றக்கூடியதாகவும் செய்கிறது.

13. கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச்சொற்களை வினைச் சொற்களாக மாற்றுக.

(1) மதிப்பு :

(2) இடர்ப்பாடு :

(3) நிர்ணயம் :

(4) அளவு :

(5) பகிர்ந்தளிப்பு :

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) பசுங்கன்று

(2) தேவைக்கதிகமாக

(3) இல்லாமலாகலாம்

(4) தங்களுக்குகந்தவாறு

(5) மதிப்பிழப்பதில்லை

# 16. பூச்சிக்கொல்லிகளும் சூழ்நிலைத் தூய்மைக்கேடும்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

## கேள்விகள்

### பகுதி - எ

1. பசுமைப் புரட்சி என்றால் என்ன?

2. பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தக் காரணமென்ன?

3. பூச்சிக்கொல்லிகளில் இரு முக்கிய வகைகள் யாவை?

4. கரிமக் குளோரின் உடலில் எவ்வாறு கேடு விளைவிக்கிறது?

5. டி. டி. டீ. எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

6. டி. டி. டீ. நரம்பை எப்படிப் பாதிக்கிறது?

7. பி. எச். சி. உடலிருந்து வெளியேறக் கூடியதா? காரணமென்ன?

8. கரிமப் பாதரசப் பூஞ்சாணங் கொல்லிகளால் ஏற்படும் தீமைகள் என்ன?

9. பூச்சிக்கொல்லிகளால் காற்றுத்தூய்மை எவ்வாறு கெடுகிறது?

10. பூச்சிக்கொல்லிகளால் நீரின் தூய்மை எவ்வாறு கெடுகிறது?

11. 'மினிமேடாநோய்' ஏற்படக் காரணமென்ன?

25 APR 1978

12. பூச்சிக்கொல்லிகளினால் ஏற்படும் சூழ்நிலைத் தூய்மைக்கேட்டை எப்படிக் குறைக்கலாம்?

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளின் சரியான விடைகளுக்கு நேரே உள்ள உயிரெழுத்துக்களை கேள்விகளுக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) கரிம பாஸ் பேட்டுக்கள் ஏன் உடலில் நீண்டகாலத்திற்கு நிலைத்து இருப்பதில்லை? ( )

(அ) அவைகளின் வீரியம் குறைந்து விடுகிறது.

(ஆ) உடலில் உள்ள வெள்ளை அணுக்கள் அவைகளை அழித்து விடுகின்றன.

(இ) அவைகள் நீரில் கரையக்கூடியவை.

(ஈ) நாம் சாப்பிடும் மருந்துகள் அவைகளை அழித்துவிடுகின்றன.

(2) குளோரினேற்றிய சைகிலோடின் பூச்சிக்கொல்லிகளுக்கும் டி. டி. டீ-க்கும் உள்ள வேறுபாடு என்ன? ( )

(அ) முதலில் உள்ளது கரிமக்குளோரின் சேர்மம் வகையைச் சேர்ந்தது, மற்றது கரிமபாஸ்பேட்டு வகையைச் சேர்ந்தது.

(ஆ) முதலில் உள்ளது தண்ணீரில் கரையும் மற்றது கரையாது.

(இ) முதலில் உள்ளது நரம்பின் நடுப்பகுதியைப் பாதிக்கும், மற்றது மேல் பகுதியைப் பாதிக்கும்.

(ஈ) வேறுபாடு ஒன்றும் இல்லை.

**பகுதி - பி**

14. பகுதி-ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி – பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி-ஏ | பகுதி-பி | |
|---|---|---|
| (1) (11) Water Pollution | (அ) வளர்சிதை மாற்றம் | ( ) |
| (2) Synthetic Organic Compound | (ஆ) தேர்ந்தெடுத்த நச்சுத் தன்மையுள்ள | ( ) |
| (3) Organic chlorine Compounds | (இ) செவ்வெறும்பு | ( ) |
| (4) Moths | (ஈ) நீர்த்தூய்மைக்கேடு | ( ) |
| (5) Impulses | (உ) மறைமுக நச்சுத்தன்மை | ( ) |
| (6) Impraised hearing | (ஊ) காற்றுச்சீர்கேடு | ( ) |
| (7) Air—pollution | (எ) செவிட்டுத்தன்மை | ( ) |
| (8) Latent toxicity | (ஐ) துணிகளைத்தாக்கும் அந்துப் பூச்சிகள் | ( ) |
| (9) Fire Ant | (ஒ) கரிமக் குளோரின் சேர்மங்கள் | ( ) |
| (10) Selective Toxicity | (ஓ) செயற்கைக் கரிமச் சேர்மங்கள் | ( ) |

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) பூச்சிக்கொல்லி

(2) பசுமைப்புரட்சி

(3) ஒட்டுண்ணி

(4) சூழ்நிலைத் தூய்மைக்கேடு

(5) பூஞ்சாணங்கொல்லி

16. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினைச்சொற்களைப் பெயர்ச் சொற்களாக மாற்றி ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியம் எழுதுக.

(1) ஏற்படு

(2) வினை

(3) சிதை

(4) விளை

(5) சார்

(6) தெளி

(7) பாதி

(8) வெளியேறு

(9) நிலை

(10) பெரு

17. அடைப்புக்குறிக்குள் கொடுத்துள்ள சொல்லை வாக்கியத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றி வாக்கியத்தைப் பூர்த்தி செய்.

(1) ——————— ஏற்படும் சூழ்நிலைத்தூய்மைக் கேட்டால் உயிரினங்களுக்கு உடனடியான கேடு ஏற்படுவது மிகக் குறைவு (பூச்சிக்கொல்லி)

(2) அதன் விளைவாக ———————வெளிவரும் பூச்சிகள் சிதைந்த உருவங்களுடன் காணப்பட்டன. (கூட்டுப்புழு)

(3) ஆனால் கரிமக்குளோரின் சேர்மங்கள் பெரும்பாலும் ——— கரையாதத் திடப் பொருட்கள். (நீர்)

(4) டி. டி. டீ. யால் பாதிக்கப்பட்ட நரம்பு ஒரே சமயத்தில் பலவிதமான ——— ஏற்படுத்தும். (உணர்வு)

(5) உயிரினங்களின் உடலில் வேகமாக வளர்சிதை மாற்றம் அடைந்து குறுகிய காலத்தில் அவற்றின் ——— வெளியேற்றப்படுகின்றது. (உடல்)

# 17. வாணிகத்தின் வளர்ச்சி

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்.

## கேள்விகள்

### பகுதி—எ

1. வாணிகம் நுட்பங்களும் சிக்கல்களும் மிகுந்த துறையாக மாறக் காரணமென்ன

2. கிரேக்க நாடு வாணிபம் செய்ய வசதியாக எப்படி அமைந்திருந்தது?

3. ரோமாபுரியின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?

4. ஹான்சிடிக் குழு ஏற்படக் காரணமென்ன? அதன் செயல்கள் யாவை?

5. இடைக்காலத்தில் வாணிகம் வளர்ச்சி அடையாததற்குக் காரணமென்ன?

6. வணிகச் சங்கங்களின் பணிகள் என்னவாக இருந்தன?

7. முதன்முதலில் உலகத்தைக் கடல் வழியாகச் சுற்றித் திரும்பியவர் யார்?

8. வாணிக முறை என்ற பொருளாதார ஏற்பாடு எப்படிச் செயல்பட்டது?

9. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) கி. மு. 330 ஆம் ஆண்டில் —————————— படையெடுப்பிற்குப் பின்னரே பாரசீக நாட்டு வாணிபம் வீழ்ச்சியடைந்தது.

(2) பினிஷியர்கள் —————————————— என்னுமிடத்தை மையமாகக் கொண்டு கடல் வழியாகவும் தரைவழியாகவும் வாணிகம் நடத்தினர். ஏறத்தாழ ——————ஆண்டுகட்கு இவர்கள் வாணிகவுலகில் ஆதிக்கம் செலுத்திவந்தனர்.

(3) நாகரீக உலகினை நடுங்கச் செய்யும் அடிமை வியாபாரத்தை ஏற்படுத்தியவர் ——————————————

(4) ——————————ஒரு நாட்டின் தலைசிறந்த தொழில் என்று வற்புறுத்தியது வாணிக முறைதான்.

(அலெக்சாந்தர், வெளிநாட்டு வாணிகமே, ஆயிரம், போர்ச்சுகீசியரே)

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விக்கும் உரிய விடையைக் கண்டு பிடித்து அந்த விடைக்குமுன் உள்ள உயிரெழுத்தைக் கேள்விக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) வாணிகம் தோன்றுவதற்கான தேவை என்ன? (    )

(அ) லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணம்.

(ஆ) ஒரு குடும்பத்தில் தேங்கிக்கிடக்கும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம்.

(இ) ஒரே குடும்பத்தில் தங்களுக்குத் தேவைப்பட்ட பொருள்கள் அனைத்தையும் தாங்களே செய்து கொள்ள முடியவில்லை என்ற எண்ணம்.

(ஈ) எல்லோருக்கும் எல்லா பொருள்களும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம்.

(2) பண்டை எகிப்தியர் ஏன் வெளிநாட்டு வாணிகத்தை மேற்கொள்ளவில்லை? ( )

(அ அவர்களுக்குக் கப்பல் கட்டத் தெரியாது.

(ஆ) அவர்கள் இனமுறை வாணிகம் செய்யத் தடையாக இருந்தது.

(இ) லாபம் அடைய வேண்டும் என்ற எண்ணமில்லை.

(ஈ) வெளிநாட்டு வியாபாரம் மேற்கொள்ளுமளவுக்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை.

(3) ரோமபுரியின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன? ( )

(அ) பேரரசர் அகஸ்டஸ் இறந்தது.

(ஆ) அரசியல் குழப்பம்.

(இ) மக்கள் கேளிக்கையிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் ஈடுபட்டது.

(ஈ) முகமதியப் பேரரசின் படையெடுப்பு.

(4) தற்கால வாணிகத்திற்கு அடிப்படையாக விளங்கியது எது? ( )

(அ) கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்ற எண்ணம்.

(ஆ) வாணிகத்தில் அரசாங்கங்களின் ஈடுபாடு.

(இ) வாணிபம் என்ற போர்வையில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம்.

(ஈ) தொழிற்புரட்சி.

## பகுதி - பி

11. பகுதி - ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி - பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - ஏ | பகுதி - பி | |
|---|---|---|
| (1) World Market | (அ) பாங்கர்கள் | ( ) |

| | | | |
|---|---|---|---|
| (2) Mercantilism | (ஆ) ஃபிளாரென்சு | ( ) |
| (3) Industrial Revolution | (இ) பினிஷியர்கள் | ( ) |
| (4) Reanissance | (ஈ) தொழிற்புரட்சி | ( ) |
| (5) Craft Guilds | (உ) உலகச்சந்தை | ( ) |
| (6) Merchant Guilds | (ஊ) வாணிகமுறை | ( ) |
| (7) Athens | (எ) மறுமலர்ச்சி | ( ) |
| (8) Phoenicians | (ஏ) கம்மியவாரியகச் சங்கங்கள் | ( ) |
| (9) Bankers | (ஐ) வாணிகர்சங்கங்கள் | ( ) |
| (10) Florence | (ஒ) ஏதன்சு | ( ) |

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) தன்னிறைவு

(2) தொழில்நுட்பங்கள்

3) தமதாக்கிக்கொள்

(4) வீழ்ச்சி

(5) கண்டுபிடிப்புகள்

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) சீர்கேடடைந்து

(2) மேற்கொள்ளலாயினர்

(3) மிகுந்ததாயிற்று

(4) வாணிகமனைத்தையும்

(5) ஆயிரமாண்டுகட்கு

(6) காப்புளிக்கப்பட்டது

14. அடிக்கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் வேறுபாடு உண்டாகாத வகையில் வேறு சொற்களை எழுதுக.

(1) ஆஃப்பிரிக்க மக்களைக் கொண்டுபோய் மேற்கு இந்திய, அமெரிக்க நாடுகளில் அடிமைகளாக விற்றுப் பெரும் பணம் சம்பாதிப்பது மிக ஆதாயமான வாணிகமாகக் காணப்படவே, அனேகமாக எல்லா ஐரோப்பிய நாடுகளும் அதில் ஈடுபட்டன.

(2) இப்புதுக் கண்டுபிடிப்புகளனைத்தும் பிற்காலத்தில் உலகப் பொருளாதாரம், வாணிகம், அரசியல், சமூகம் ஆகிய அனைத்தையும் பாதித்தன.

(3) கிரேக்க நாட்டில் கொரிந்த் என்ற இடம் ஒரு சிறந்த வாணிக நகராகத் திகழ்ந்தது.

# 18. எரிமலைகள்

பாடக்குறிப்புகள் எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி - ஏ

1. எரிமலை என்றால் என்ன?

2. லாவா என்றால் என்ன?

3. நம் நாட்டில் பேசால்ட்பாறை எங்குள்ளது?

4. காலிப்ளவர் போன்ற தோற்றமுடைய எரிமலை வகையின் பெயர் என்ன?

5. வெயிட்பியர் நகரமும் அதன் மக்களும் அழியக் காரணமென்ன?

6. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

   (1) —————— தற்போது மேக்மா முதலிய பொருள்களைக் காக்காமல் உறங்கிக் கொண்டிருந்தாலும், மறுபடியும் விழித்தெழுந்து செயல்படக்கூடும். (உயிர்ப் பெரிமலைகள்/உறங்கெரிமலைகள்

   (2) லாவாவின் வெப்பநிலை அதன் —————— வீதத்தைப் பொறுத்துள்ளது. (இரசாயனச் சேர்க்கை/ஆக்ஸ்ஸிஜன்)

   (3) லாவாவின் நகரும் தன்மை அதன் வெப்பநிலை இரசாயனச் சேர்க்கை வீதம் —————— ஆகியவைகளைப் பொறுத்து இருக்கும். (அதில் கரைத்துள்ள வாயுக்கள்/அதில் உள்ள நீராவி)

   (4) —————— அதிகம் கொண்ட அமில லாவா மெதுவாக நகரும் தன்மையுடையது. (சிலகா/காரலாவா)

8. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குரிய சரியான விடைகளுக்கு நேரே உள்ள உயிரெழுத்துக்களைக் கேள்விகளுக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) புவியின் உள்ளே வாயுக்களும், ஆவிப் பொருள்களும் உருகிய பாறைக் குழம்பில் கரைந்திருக்கக் காரணமென்ன? ( )

(அ) வெப்பம் அதிகமாக இருப்பதால்

(ஆ) அழுத்தம் அதிகமாக இருப்பதால்

(இ) திரவத்தில் அவைகள் கரைவதால்

(ஈ) ஏற்கனவே பாறையில் அவைகள் கலந்திருப்பதால்

(2) மேக்மா மேலே வரும் பொழுது சப்தமும் வெடிப்பும் ஏற்படக் காரணமென்ன? ( )

(அ) வெப்பம் குறைவதால்

(ஆ) அழுத்தம் குறைவதால்

(இ) பாறைகள் உடைவதனுல்

(ஈ) மண்பொத்துக்கொண்டுவருவதால்

(3) எரிமலை வெளிப்படும்போது பெருமழை ஏற்படக்கூடும். காரணமென்ன? ( )

(அ) எரிமலையை அணைப்பதற்காக

(ஆ) அங்குக் காற்றின் அழுத்தம் குறைவாக இருப்பதால்

(இ) நீராவி, அதிக அளவில் வெளிப்படுவதால்

(ஈ) பலவாயுக்கள் வெளிப்படுவதால்

(4) மேக்மாவின் வெப்பநிலை அதிகரிக்கக் காரணமென்ன? ( )

(அ) அதில் கலந்துள்ள வாயுக்கள்

(ஆ) அதிக அழுத்தம்

(இ) அங்கு ஏற்படும் வெடிப்பு

(ஈ) சூரியவெப்பம்

(5) மேக்மா எளிதில் நகரக்காரணமென்ன? ( )

(அ) அதிக அழுத்தம் உள்ளதால்

(ஆ) நீராவி கலந்துள்ளதால்

(இ) வாயுக்கள் கலந்துள்ளதால்

(ஈ) திரவமாக இருப்பதால்

(6) மேக்மா பூமிக்குமேலே அதிக உயரம் தள்ளப்படக் கரரணமென்ன? ( )

(அ) அதிகம் அழுத்தம் இருப்பதால்

(ஆ) நீராவி கலந்திருப்பதால்

(இ) பூமியை வெடித்துக்கொண்டுவருவதால்

(ஈ) அதன் அடர்த்தி குறைவதால்

**9.** பகுதி-ஏஇல் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி-பி-யுடன் இணைத்துச் சரியான விடையின் எண்களைப் பிறைக்கட்டில் எழுதவும்,

| பகுதி – ஏ | பகுதி - பி | |
|---|---|---|
| (1) பைரோகளாப்ட் | (அ) திரிக்கப்பட்டகயறு போன்ற லாவா | ( ) |
| (2) ஆ லாவா | (ஆ) வெடிப்பு ஏற்படும்போது பாறைகள் உடைந்து ஏற்படும் துகள்கள் | ( ) |
| (3) பஹோ ஹா | (இ) பிளவுகளில் வழியாக வெளிப்பட்ட கெட்டி லாவா | ( ) |
| (4) பேசால்ட் | (ஈ) வாயுக்கள் வெளிப்பட்ட பிறகு திட்டு திட்டாகக் கெட்டியாக இருக்கும் லாவா | ( ) |

10. பகுதி-ஏ-யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி-பி-யுடன் இணைத்துச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| | | |
|---|---|---|
| (1) Active Volcano | (அ) வெடிப்பு | ( ) |
| (2) Dormant Volcano | (ஆ) அமில லாவா | ( ) |
| (3) Eetinet Volcano | (இ) கார லாவா | ( ) |

| | | | |
|---|---|---|---|
| (4) Explosion | (ஈ) உயிர்ப்பெரிமலை | ( | ) |
| (5) Basic lava | (உ) உறங்கெரிமலை | ( | ) |
| (6) Acid lava | (ஊ) அணைந்த எரிமலை | ( | ) |
| ( ) Volcanic Breccia | (எ) எரிமலைத்தூசி | ( | ) |
| ( ) Volcanic dust | (ஏ) எரிமலைப்பரற்பாறை | ( | ) |
| (9) Tuff | (ஐ) எரிமலைக்குண்டுகள் | ( | ) |
| (10) Bombs | (ஒ) ஸ்கோரைய் துண்டுகள் | ( | ) |
| (11) Scorial | (ஓ) எரிமலைச் சாம்பற்கல் | ( | ) |
| (12) Pumice | (ஔ) எரிமலைப்பரற்பாறை | ( | ) |
| (13) Volcanic Breccia | (ஃ) நுரைக்கல் | ( | ) |
| (14) Ash | (க) எரிமலைகள் பிளவுவகை | ( | ) |
| (15) Fissure type | (கா) எரிமுகில் | ( | ) |
| (16) wuees ardentes | (கி) எரிமலைச் சாம்பல் | ( | ) |

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தெழுதுக.

(1) உறங்கெரிமலைகள் தற்போது மேக்மா முதலிய பொருள்களைக் கக்காமல் உறங்கிக் கொண்டிருந்தாலும், மறுபடியும் விழித்து எழுந்து செயல்படக்கூடும்; அணைந்த எரிமலைகள் பழைய புவியமைப்புக்காலங்களில் உண்டானவை.

(2) புவியின் உள்ளே அதிக அழுத்தம் இருப்பதால், வாயுக்களும், ஆவிப்பொருள்களும் உருகிய பாறைக்குழம்பில் கரைந்திருக்கும்.

(3) எரிமலையின் வாயில் லாவா உறைந்துவிடுவதால், எரிமலைக்குழாயில் வாயுக்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து அழுத்தம் அதிகரிக்கிறது.

(4) எரிமலை திடீரென வெடித்துப் பொங்கும் போது எரிமலை வாயை அடுத்துள்ள பகுதியும் உடைந்து சிதறிவிடக்கூடும்.

12. அடிக்கோடிட்டுள்ள சொற்களுக்குப் பதிலாக பொருள் வேறுபாடு உண்டாகாத வகையில் வேறு சொற்களை எழுதுக.

(1) நீராவி அதிக அளவில் வெளிப்பட்டு முகில்களாக மாறி மேலே சென்று குளிர்ச்சியடைந்து பெருமழை பெய்யக்கூடும்.

(2) தற்போது பொங்கும் எரிமலைகள் யாவும் இவ்வகையைச் சேர்ந்தவை.

13, கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) மேற்பரப்பு

(2) கரைந்துள்ள

(3) கெட்டியாகிவிடுகிறது

(4) விரிவடைந்து

(5) ஆவிப்பொருள்கள்

(6) பாறைத்துகள்கள்

(7) கூடியதாயிருக்கும்

(8) அவ்விடங்கள்

(9) அடுக்குகளாலான

14. அடைப்புக் குறிக்குள் கொடுத்துள்ள சொல்லை வாக்கியத்திற்குத் தகுந்தாற்போல மாற்றி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

(1) புவிப்பரப்பில் உள்ள சிறு துவாரம் அல்லது பிளவின் ——— புவியின் கீழ் அடுக்குகளிலிருந்து மேக்மா முதலிய பொருள்கள் வெளிப்படுபவை எரிமலை எனலாம். (வழி)

(2) புவியின் உள் அடுக்குகளிலிருந்து வெளிவரும் மேக்மாவில் ——— பாறையைத் தவிரப் பல வாயுக்களும் ஆவிகளும் இருக்கின்றன. (உருகு)

(3) புவியின் உள்ளே அதிக அழுத்தம் இருப்பதால் வாயுக்களும், ஆவிப்பொருள்களும் உருகியபாறைக் குழம்பில் ——— (வரைந்து)

(4) எரிமலையிலிருந்து வெளிப்படும் வாயுக்களில் பொதுவாகக்———திராவியாகும். (கான்)

(5) லாவாவுடைய நகருந்தன்மை அதன் வெப்பநிலை, இராசாயனச் சேர்க்கை வீதம் மற்றும் அதில் ——— வாயுக்களைப் பொருத்து இருக்கும். (கரை)

# 19. விமானத்துறைக்கு விந்தையான மிதவைக்குடை

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

## பகுதி – எ

1. மிதவைக் குடையின் பயன் என்ன ?

2. ஒரு விமானிக்கு இருக்கவேண்டிய திறமை என்ன ?

3. ஒரு விமானியைப் படைத்துறை இழப்பது, ஏன் ஈடுசெய்ய இயலாத நஷ்டமாகக் கருதப்படுகிறது.

4. 'பல்யூட்' எப்படி இயங்குகிறது ?

5. பார்ட் முறையில் எப்படி விமானி காப்பாற்றப்படுகிறார் ?

6. பல்யூட் மிதக்கக்கூடிய உயரத்தை வசதிக்கேற்ப மாற்றிக் கொள்வதில் ஏற்படும் நன்மை என்ன?

7. இறக்கை மிதவை முறையில் எவ்வாறு விமானி காப்பாற்றப்படுகிறுர் ?

8. ஹெலிக்ாப்டர் முறையில் விமானி எவ்வாறு காப்பாற்றப்படுகிருர் ?

9. சிறு விமான முறையில் விமானி எவ்வாறு காப்பாற்றப்படுகிருர்?

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்வியின் சரியான விடைக்கு நேரே உள்ள உயிர் எழுத்தைக் கேள்விக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

ஆபத்துக் காலத்தில் போர்விமானி என்ன செய்ய வேண்டும்? ( )

(அ) சாவைக் கண்டு பயப்படக்கூடாது.

(ஆ) விமானத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.

(இ) விதிப்படித்தான் நடக்கும் என்று இருக்க வேண்டும்.

(ஈ) ஆபத்திலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் என்பதை உடனடியாக உணர்ந்து, விரைவாகச் செயல்படவேண்டும்.

## பகுதி - பி

11. பகுதி - ஏ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி - பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி - ஏ | பகுதி - பி |
|---|---|
| (1) Parachute | (அ) இறக்கைமிதவைமுறை( ) |
| (2) Hotair ballon | (ஆ) சிறுவிமானம் ( ) |
| (3) ballute | (இ) எரிவாயுக்குழாய் ( ) |
| (4) Burners | (ஈ) பல்யூட் ( ) |
| (5) Parawing | (உ) வெப்பக்காற்றுப்பலூன்( ) |
| (6) Miniplane | (ஊ) மிதவைக்குடை ( ) |

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச் சொற்களை வினைச்சொற்களாக மாற்றுக.

(உ - ம்) ஈடுபாடு : ஈடுபடு

(1) பயிற்சி :

(2) இழுப்பு :

(3) வெளியேற்றம் :

(4) எச்சரிக்கை :

(5) இணைப்பு :

(6) மிதப்பு :

(7) அமைப்பு :

(8) அனுபவம் :

(9) பொருத்தம் :

(10) குழப்பம் :

13. கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட பகுதிகளை நீக்கிவிட்டு அந்த இடத்தில் தகுந்த வினாச் சொற்களைப் போட்டுக் கேள்வி வாக்கியங்களை அமைத்து எழுதவும்.

(1) விமானி காயமடைந்து அவரால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் இது தானாக இயங்கிச் சுமார் 6000 அடி உயரத்தில் விமானியைத் தாங்கிச் செல்கிறது.

(2) இந்த இயக்கம் காரணமாக இறக்கைக்குக் குறுக்காக மேல்நோக்கிய காற்றழுத்தம் உண்டாகிறது.

(3) இந்த நிகழ்ச்சி ஐந்தே வினாடிகளில் நடந்து முடிந்துவிடுகிறது.

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பெயர் எச்சத் தொடராக மாற்றுக. மாற்றிய பின் வாக்கியங்களில் பயன்படுத்துக.

(1) விமானம் தீப்பற்றி எரிகிறது.

(2) விமானி காற்றில் மிதக்கிறார்.

(3) கீழே உள்ள எதிரிகள் விமானத்தைச் சுட்டுவிட்டனர்.

(4) இந்த இறக்கை மிதவை 600 இராத்தல் எடையுள்ளது.

# 20. நாய்க்குடை

பாடக்குறிப்புகள் எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி - எ

1. உடல் நலப் பாதுகாப்பிற்குத் தேவையான மிக முக்கிய உணவுச் சத்து என்ன?

2. சராசரி மனிதனின் உடல் நலம் மிக எளிதில் சீர்கெடுவதற்குக் காரணம் என்ன?

3. நாய்க்குடையில் உள்ள சத்துப் பொருள்கள் யாவை?

4. ஒரு விவசாயிக்கு நாய்க்குடை வளர்ப்பது கவர்ச்சிகரமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

5. எந்தச் சூழ்நிலையில் நாய்க்குடை வளரும்?

6. நாய்க்குடையின் முதன்மையான உறுப்புகள் யாவை?

7. மைசீலியம் வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் பொருள்கள் எவை?

8. எவற்றால் நாய்க்குடைகளின் இனப்பெருக்கம் நடைபெறுகின்றன ?

9. இந்தியாவில் எங்கு நாய்க்குடைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது ?

10. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்து எடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) இந்திய மக்கள் தொகையில் ———— விழுக்காட்டினர் சைவ உணவை மட்டுமே கொள்ளுகின்றனர் என்பதனால் தாவரங்கள் ———— மூலம் அவர்களுக்குப் புரதம் கிடைக்கச் செய்வதற்கான வழிமுறைகளைக் காண வேண்டியுள்ளது.

(ஆ) தாவரங்களில் நடைபெறும் வேதிவினைக்குத் தேவையான ———— நாய்க் குடையில் இல்லாததால் பிற தாவரங்களில் நிகழ்வதுபோலத் தன் வளர்ச் சிக்குத் தேவையான உணவைத் தயாரித்துக்கொள்ள ————

(இ) ———— நிலப்பகுதிகளிலும் ———— வெளிகளிலும் வளரும் நாய்க் குடைகள்தாம் உண்ணத் தக்கவை. நனைந்த மரக்கட்டைகளில் வளர்பவை ———— தன்மை கொண்டவையாகும்.

(உணவு, சதுப்பு, தாவரங்கள், குளோரோபில், வண்டல், சக்தி)

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்வியின் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

நாய்க்குடை பயிர் செய்வதில் நாட்டம் ஏற்படாததற்குக் காரணம் என்ன? (   )

(அ) அதிக லாபம் இல்லை.

(ஆ) மக்கள் உணவாக ஏற்குமளவுக்குப் பழக்கமில்லை.

(இ) தட்பவெப்பநிலைகளையும் பிற சூழ்நிலைகளையும் அனுசரித்தே வளர்கிறது.

(ஈ) இது 'தெய்வத்தின் தின்பண்டம்' என்று நம்பப்பட்டதால்.

12. பகுதி ஏ-யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி பி-யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி-ஏ | பகுதி-பி |
|---|---|
| (1) மீசோபைல்கள் | (அ) உண்பதற்குத் தகுதிவாய்ந்த நாய்க்குடை (   ) |
| (2) தெர்மோபைல்கள் | (ஆ) நச்சுத்தன்மை வாய்ந்த நாய்க்குடை (   ) |
| (3) அசெட்டால்டிஹைடு | (இ) தாழ்வெப்பநிலையில் வளரும் நுண்ணுயிர்கள் (   ) |

| | | | |
|---|---|---|---|
| (4) | அமாஸிடோப்சிஸ் | (ஈ) உயிர்வெப்பநிலையில் வளரும் நுண்ணுயிர்கள் | ( ) |
| (5) | அகாரிச்கஸ் பைஸ்போரஸ் | (உ) கரிமம் பொருள் | ( ) |
| (6) | புருரோட்டஸ் பாஸ்போரயஸ் | (ஊ) இந்த நாய்க்குடை வெளியிடும் ஒளிக் கற்றை விலங்குகளைக் கவர்ந்து ஈர்க்கிறது | ( ) |

## பகுதி - பி

13. சொற்களின் வடிவங்களை மாற்றி வாக்கியத்தை எழுதுக.

(1) சத்துணவுத் திட்டம் பற்றியே தற்போது எங்கும் பேச்சாக இருக்கிறது.

(2) நாய்க்குடையைப் பொறுத்தவரை ஒரு விவசாயியைப் பெரிதும் கவர்ந்தது அதனுடைய விரைவான வளர்ச்சிதான்.

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைச் சிறு சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது

(1) இவ்வாறு வளர்ச்சியின் நிலையை வழிமாற்றிக் கொடுக்கும் கட்டாயம் ஏற்படுவதனால் நாய்க்குடையைப் பயிர் செய்யும் போது தகுந்த உரத்தைக் கவனமாக இடவேண்டியிருக்கிறது.

(2) இயற்கை முறையில் சாதாரண மக்களுக்கு ஏற்றவாறு புரதம் கிடைக்க நாய்க்குடையைப் பயன்படுத்தலாம் என்பதாக இத்தகைய ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வருகிறது.

(3) தற்போது உலகம் முழுவதும் நாய்க்குடை, வேளாண்மைக்கு உரியதாகப் பயிர் செய்யப்பட்டு உணவுப் பொருளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

15. கீழே கொடுத்துள்ள வாக்கியங்களைப் பெயர் எச்சத்தொடராக 'மாற்றி வாக்கியங்களை முழுமையாக்கவும்.

(1) தாவர இலைகளில் புரதம் அடங்கியிருக்கிறது.

(2) இந்த மண் இரண்டுவகையான வேலைகளைச் செய்கிறது.

(3) நாய்க்குடைகளைப் பற்றிச் சில சுவையான நம்பிக்கைகள் உலவுகின்றன.

16. கீழே கொடுத்துள்ள வாக்கியங்களில் உள்ள ஒருமையைப் பன்மையாக மாற்றி வாக்கியத்தை எழுதுக.

(1) இந்தக் கரிமப் பொருட்களின் நீக்கம் பாக்டீரியாவின் வளர்ச்சிக்கும் பெரிய உதவியாக அமைகிறது.

(2) இவ்வாறு வளர்ச்சியின் நிலையை வழிமாற்றிக் கொடுக்கும் கட்டாயம் ஏற்படுவதனால் நாய்க்குடையைப் பயிர் செய்யும்போது தகுந்த உரத்தைக் கவனமாக இடவேண்டியிருக்கிறது.

(3) சிறிய அளவில் வேளாண்மை நடத்துபவர்களுக்கு நாய்க்குடைப்பண்ணை நல்ல பலனைத் தருகிறது.

(4) இத்தகைய ஆராய்ச்சிகளின் மூலமாக ஓர் உண்மை புலனாகியிருக்கிறது.

(5) இதுதான் அமெரிக்காவிலும் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

(6) அழுகிய இலைகளிலும் மரக்கட்டைகளிலும் உள்ள நுண்ணுயிர்கள் பயன்படுத்தும் உணவைத்தான் நாய்க்குடையும் பயன்படுத்துகிறது.

17. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) நுண்ணுயிர்கள்

(2) பாழ்பட்டுப்போகாமல்

(3) பாக்டீரியாவின் வளர்ச்சி

(4) வைட்டமின்கள்

(5) குளோரோபில்

18. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பிரித்தெழுதுக.

(1) ஆட்டிறைச்சி

(2) ஊட்டச்சத்து

(3) தன்மையானவற்றை

(4) இணைந்துள்ள

(5) குடைப்பரப்பு

# 21. சமூக அமைப்பின் தோற்றம்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி—எ

1. முதன் முதலில் 'சைக்காலஜி' என்பதற்கு என்ன பொருள் கற்பிக்கப்பட்டது?

2. 'உள்ளம்' என்பது என்ன ?

3. 'சைக்காலஜி' என்பதற்கு நடத்தைக் கொள்கையினர் கொடுத்த விளக்கம் என்ன ?

4. உளவியல் என்பது என்ன ?

5. சமூகம் எப்படி உருவாயிற்று ?

6. அக்கால மக்களின் சமூகம் பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்ளக் கிடைக்கும் சான்றுகள் யாவை ?

7. சமூகமென்னும் கோட்பாடு முதன் முதலில் எங்கு தோன்றியது ?

8. சமூகக் கூட்டமைப்புத் தோற்றம் பற்றி பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியவர்களின் விளக்கங்களில் காணப்படும் வேறுபாடு என்ன ?

9. சமூக அமைப்பின் தோற்றம் பற்றி ரூசோவின் கருத்து என்ன ?

10. சமூக அமைப்பின் விளக்கம் பற்றி டார்வின் கருத்து என்ன ?

11. சமூக உளவியல் என்றால் என்ன ?

## பகுதி – பி

12. கீழே கொடுத்துள்ள ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக :

(1) Soul : ——————

(2) Concept : ——————

(3) Behaviourists : ——————

(4) Social Contract : ——————

(5) Evolution theory : ——————

13. அடைப்புக் குறிக்குள் கொடுத்துள்ள சொல்லை வாக்கியத்திற்குத் தகுந்தாற்போல மாற்றி வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

(1) இந்நூல்களின் மூலம் அக்கால மக்களின் சமூகம் பற்றிய கருத்துக்களையும், எண்ணங்களையும் நம்மால் ———————— கொள்ள முடிகின்றது. (அறி)

(2) சமூக அமைப்பு என்பது ஆதிகாலத்தில் மனிதர் ஒருவருடன் ஒருவர் இணைந்து ———————— தொடங்கியபோதே தோன்றியது எனலாம். (வாழ்)

(3) தனிமனிதன் தன்னுடைய குறிக்கோள்கள், தேவைகள் முதலியன ஈடேற வேண்டி இவ்வாறு ———————— கூட்டுறவு அமைப்பில் ஈடுபட்டுச் சமூக மனிதனாக மாறுகின்றான் என்று அவர் கருதுகிறார். (அவன்)

(4) இவ்வாறு பலரும் பல்வேறு வகைகளில் தனியன் ஏன் சமூகத்தில் ஒன்றி வாழ்கின்றான் என்பதற்கு விடையாகப் பற்பல கோட்பாடுகளையும், விளக்கங்களையும் எடுத்துக் ———————— (கூறு)

(5) அவரது கூற்றுப்படி மனிதன் ———————— பிறருடன் ஒத்து வாழவும், சார்ந்து இருக்கவும் அறிந்திருக்கிறான். (கூட்டு)

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒன்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) உளவியல்

(2) வடிவம்

(3) சமூகம்

(4) கட்டுதிட்டங்கள்

(5) குறியீடுகள்

(6) புதைபொருள்

(7) தத்துவம்

(8) சமூக உளவியல்

(9) கிரேக்க அறிஞர்

(10) அறவழி

15. கீழ்க்காணும் சொற்களிலிருந்து சரியான வாக்கியத்தை உருவாக்குக.

(1) விலங்குடன் தாமும் ஒரு விலங்காய் இருந்த நிலை மாறி, அவர்கள் கூட்டங் கூட்டமாய் ஒன்றி, ஆதி மனிதர்கள் காடு மேடுகளில், ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டபோதே சமூகம் உருவாயிற்று எனலாம்.

(2) எண்ணங்களும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நூல்களின் மூலம் அக்கால மக்களின் சமூகம் பணியாற்றிய கருத்துக்களையும்.

(3) அதன் தோற்றம் வரலாறுகளையும் பற்றிக் காண்போம்.

(4) மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்குவது. உளவியல் என்பது.

16. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை பெயரெச்சத் தொடராக மாற்றி, வாக்கியத்தை முழுமையாக்கவும்.

(உ—ம்) வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்கள் சிறப்பாக உள்ளன.

(1) இந்தச் சூழ்நிலை மாறுகின்றது.

(2) தனி மனிதனுக்கும் மற்றவனுக்கும் இடையே எண்ணற்ற செயல்கள் தோன்றுகின்றன.

(3) கல்லூரி மைதானத்தில் மாணவர் படை துப்பாக்கிப் பயிற்சி செய்து கொண்டிருக்கிறது.

(4) அவன் கண்ணில் அச்சம் தெரிகிறது.

# 22. கிராமச் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஒரு விண்வெளித் திட்டம்

பாடக் குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

# கேள்விகள்

## பகுதி—எ

1. விவசாய பொருள்கள் வேகமாக உற்பத்தி ஆகாமைக்கு முக்கிய இரண்டு காரணமென்ன?

2. கிராம மக்கள் உடல் நலத் துறையில் மிகவும் பின் தங்கி இருப்பதற்குக் காரணமென்ன?

3. நமது கிராம சமுதாயம் போதிய அளவு முன்னேறுததற்கு முக்கிய காரணமென்ன?

4. இந்தியா அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் என்ன?

5. ஏ.டி.எல்.—6 என்ற செய்திப் போக்குவரத்துச் செயற்கை விண்வெளிக்கோள் எவ்வளவு உயரத்தில் நிலைத்து நிற்கிறது? அதன் எடை என்ன? அது உருவாக்க ஆன செலவு என்ன?

6. இந்தத் தொலைக் காட்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்கள் எத்தனை? அவைகள் எந்த மாநிலங்களில் உள்ளன?

7. இந்தக் கிராமங்கள் தேர்ந்தெடுப்பதற்கு கவனிக்கப்பட்ட அடிப்படைக் காரணங்கள் என்ன?

8. இந்தத் தொலைக்காட்சித் திட்டம் எந்தெந்த மொழிகளில் நடைபெறுகின்றன?

9. இந்தத் தொலைக்காட்சி சோதனைத் திட்டத்தின் நோக்கம் என்ன?

10. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) இன்று கிராம மக்களின் முன்னேற்றம் ———————— வேகத்தில் தான் ஏற்பட்டு வருகிறது.

(2) நம் நாட்டுக்கு முதன்மையான தொழில் ————————.

(3) நாம் இன்று உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்கள் நமக்கே போதியதாக இல்லை. இதற்குக் காரணம் நாம் ———————— பின்பற்றுவதுதான்.

(மிகுந்த, வேளாண்மை, நல்ல கல்வி முறையைப், ஆமை, புதிய முறைகளைப், குடிசைத் தொழில்.)

11. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சரியான விடைகளுக்கு நேரே உள்ள உயிரெழுத்துக்களைக் கேள்விகளுக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) கிராம முன்னேற்றமே நம் நாட்டின் முன்னேற்றம் என்று ஏன் கருதப்படுகிறது? (     )

(அ) 5,70,000 கிராமங்கள் நம் நாட்டில் உள்ளன.

(ஆ) மக்களில் பெரும்பான்மையினர் கிராமங்களில் வாழ்கின்றனர்.

(இ) நகரங்கள் ஏற்கனவே முன்னேறிவிட்டன.

(ஈ) கிராம முன்னேற்றம் மெதுவாக நடக்கிறது.

(2) நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இன்று நாட்டுக்குப் பயன்படும் முறையில் ஆளாக்கப்படாமல் முடக்கப்படுவதற்கு முக்கிய காரணமென்ன? (     )

(அ) அவர்கள் சரியாகப் படிப்பதில்லை.

(ஆ) காலத்திற்கு ஏற்ற கல்வி முறை இல்லை.

(இ) அவர்களுக்குப் படிப்பில் ஆர்வமில்லை.

(ஈ) விதிதான் காரணம்

(3) செயற்கை விண்வெளிக்கோளின் பராமரிப்பு யாரைச் சேர்ந்தது? (          )

(அ) இந்தியா

(ஆ) அமெரிக்கா

(இ) இந்தியாவும் அமெரிக்காவும்

## பகுதி—பி

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச் சொற்களை வினைச்சொற்களாக மாற்றுக.

(1) முன்னேற்றம் :

(2) ஆராய்ச்சி :

(3) மாற்றம் :

(4) பராமரிப்பு :

(5) நோக்கம் :

(6) திண்டாட்டம் :

(7) ஒப்பந்தம் :

(8) கட்டுப்பாடு :

(9) முடக்கம் :

(10) ஊட்டம் :

13. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பெயரெச்சத்தொடராக மாற்றி வாக்கியத்தை முழுமையாக எழுதுக.

(1) ஆகஸ்டு முதல் தேதி இந்த நிகழ்ச்சியை நமது பிரதமர் தொடங்கி வைத்தார்.

(2) இந்தியாவில் ஏறக்குறைய 5,7000 கிராமங்கள் உள்ளன.

(3) உடல் நலத்துறையில் கிராம மக்கள் மிகவும் பின் தங்கியுள்ளனர்.

(4) நம் நாட்டில் செய்திப் போக்குவரத்துத் துறை வலிவின்றி உள்ளது.

14. பொருள் மாறுத வகையில் அடிக்கோடிட்டுள்ள சொற்களின் வடிவங்களை மாற்றி வாக்கியத்தை மாற்றி எழுதுக.

(1) அதன்படி அமெரிக்கா விண்ணில் செலுத்தும் ஒரு செயற்கைக்கோளை ஓராண்டு காலத்திற்குத் தொலைக்காட்சி ஒலிபரப்பிற்காக இந்தியா பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஏற்படாகிறது.

(2) இது ஓராண்டுக்காலம் அமெரிக்கக் கிராமப்புறங்களுக்கு கல்விப் பணியாற்றியது.

(5) செயற்கைக்கோளின் துணைகொண்டு நடத்தப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமுதாய வளர்ச்சிக்கும் நாட்டு முன்னேற்றத்திற்கும் எத்தகைய வகையில் உதவக்கூடும் என்பதை நடைமுறையில் கண்டறியும் ஒரு சோதனைத் திட்டமாகவே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14. பொருள் மாறுத வகையில் வாக்கியத்தை மாற்றி எழுதுக.

(1) இத்திட்டம் ஓர் ஆண்டுக்காலம் நீடிக்கும்.

(2) 1969ஆம் ஆண்டு இந்தியா அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

(3) சிறந்த நோய்த் தடுப்பு முறைகள் அவர்களுக்குத் தெரியாது.

# 23. விலங்குகள் பேசுமா?

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

## கேள்விகள்

### பகுதி—எ

1. இக்கட்டுரையின் நோக்கமென்ன?

2. புற நடப்பியலார் குழந்தை எப்படி மொழியைக் கற்பதாகக் கூறுகின்றனர்?

3. புற நடப்பியலார் கருத்தைக் கட்டுரை ஆசிரியர் ஏற்காததற்குக் காரணமென்ன?

4. கிளியும் மனிதனும் மொழியைக் கற்பதில் ஏற்படும வேறுபாடு என்ன?

5. குழந்தை எப்படி மொழியைக் கற்பதாகக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?

6 விலங்குகள் செய்தி உணர்த்தும் தன்மையின் வரம்பு என்ன?

7. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) 'எளிமை' என்ற எண்ணமே——————————வளர்ச்சிக்கு அழிவு.

(2) மொழி என்பது என்ன? மொழி என்பது ஒருவன் தான் நினைக்கின்றவற்றை மற்றவனுக்கு உணர்த்தப் பயன்படுத்தும்——————————, இது நமக்குப் பழகிப்போன பதில்.

(3) உடலமைப்பிற்கும் மொழிக்கும்——————————இருக்கிறது.

(4) மொழியில்——————————வாக்கியங்கள் இருக்கின்றன.

(மனித, எண்ணற்ற, முக்கியத்துவம், ஆராய்ச்சியின் கருவி, ஒருவித தொடர்பு, ஒருவித அமைப்பு)

(8) கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு உரிய சரியான விடைகளுக்கு நேரே உள்ள உயிரெழுத்துக்களைக் கேள்விகளுக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) ஒரு குழந்தை எத்தனை வயதிற்குள் தாய்மொழியைக் கற்றுக் கொள்கிறது? ( )

(அ) 1 வருடத்தில்

(ஆ) 3 வருடங்களில்

(இ) 5 வருடங்களில்

(ஈ) 7 வருடங்களில்

(2) 'இளமையில் கல்' என்று கூறக் காரணமென்ன? ( )

(அ) இளமையில் வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என்ற தேவை இல்லை.

(ஆ) வயதானவர்களைவிட குழந்தைகள் எளிமையாகவும் விரைவாகவும் கற்றுவிடுகின்றன.

(இ) குழந்தைகள் தான் பயந்துகொண்டு படிப்பார்கள்.

(ஈ) வீட்டில் குழந்தைகள் தொல்லை கொடுக்கும் நேரத்தைக் குறைக்கிறது.

## பகுதி—பி

(9) கீழே கொடுத்துள்ள ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.

(1) Theory of Evoluation = ——————

(2) Adults = ——————

(3) Behaviounists = ——————

(4) Infinite = ——————

(5) Learning process = ——————

(6) Memory = ——————

(7) Imitation = ——————

(8) Transformational grammar = ——————

(9) Structural Description = ——————

(10) Device = ——————

(11) Creative power = ——————

(10) கீழே கொடுத்துள்ள வாக்கியங்களைப் பெயர் எச்சத்தொடராக மாற்றி வாக்கியத்தை முழுமையாக்கவும்.

(1) மொழியில் எண்ணற்ற வாக்கியங்கள் இருக்கின்றன.

(2) இப் பத்து வாக்கியங்களையும் திருப்பிக் கூற அதே ஐந்து நிமிடங்களைத்தான் கிளி எடுக்கிறது.

(3) உருவகப்படுத்திக் கூறினால் இலக்கணம் போன்றதொரு எந்திரம் நமக்குள் இருக்கிறது.

4 மொழியில் படைப்பாற்றல் அமைந்து கிடக்கிறது

(11) கீழே கொடுத்துள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) எண்ணிலடங்கா

(2) ஒலி வகைகள்

(3) விலங்கியல் அறிஞன்

(4) நாகரிகக் கருவிகளுள்

(5) மொழி கற்கின்ற திறமை

12. கீழே கொடுத்துள்ள சொற்களைப் பிரித்து எழுதுக.

(1) நினைக்கின்றவற்றை = ——— ———

(2) கணக்கிட்டுவிட்டார்கள் = ——— ———

(3) தங்களுக்கிடையே = ——— ———

(4) இருபத்தோராவது = ——— ———

(5) இப்பத்து = ——— ———

(6) அவ்வாக்கியங்களின் = ——— ———

(7) எண்ணிலடங்கா = ——— ———

# 24. அரசியல் அமைப்பு என்பன என்ன?

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

## கேள்விகள்

### பகுதி—எ

1. அரசியல் அமைப்பு என்பதற்குப் பிரைஸ் பிரபுவின் விளக்கம் என்ன?

2. நாடு என்பதற்கு முக்கியமாக இருக்கவேண்டிய உறுப்புக்கள் யாவை?

3. 1947 ஆகஸ்டு 15-க்கு முன்பு ஏன் இந்தியாவை நாம் நாடு என்று கூற முடியவில்லை?

4. இறைமை என்றால் என்ன?

5. சமூக பலம் இன்றி ஒரு சட்டம் செயல்பட முடியுமா?

6. அரசாங்கத்தின் மூன்று உறுப்புக்கள் யாவை?

7. செயற்குழுவின் செயல் என்ன?

8. நீதித் துறையின் கடமை என்ன?

9. அரசியல் அமைப்பு என்றால் என்ன?

10. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) மனிதன் ஒரு அரசியல் பிராணி. அவன் மற்ற மனிதர்களிடமிருந்து——————————— வாழமுடியாது.

(2) இயற்கையில் பிறந்த மனிதன் ஒரு சமூகத்தில் ஒழுங்காகவும், அமைதியாகவும் வாழ வேண்டுமாயின்————————————மிகவும் முக்கியமானதாகும்.

(3) மனிதன் உரிமையுடன் வாழவேண்டியவன்தான். ஆயினும் சமூக நலம், சமூகத்தின் முன்னேற்றம் இவற்றிற்காக அவன் தன்னுடைய————————————————விட்டுக்கொடுக்க வேண்டியவனாய் இருக்கிறான்.

(4) இன்றைய அரசியல், பொருளாதாரம் இவைகளின் கருத்துப்படி அரசாங்கம் பொது மக்களின் நலன்களை முதன்மையாகக் கொண்டு பொதுநல நாடு என்பதனை உண்டாக்க முயன்று வருகிறது. இவற்றின் காரணமாக சட்டமன்றத்தின் பணிகள் நாளுக்குநாள்——————————————— கொண்டே போகிறது.

(5) மாண்டெஸ்க்யூ அவர்களின் அரசியல் விதிப்படி ஒரு அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளும், ——————————இயங்குவது நடைமுறைக்கு ஒவ்வாததாகிறது.

(மாறுபட்டு, தனித்தனியே சேர்ந்து சில உரிமைகளை, பழக்கவழக்கங்கள், அதிகமாகிக், சட்டங்கள், தனித்து சுகபோகங்களை, குறைந்து)

### பகுதி—பி

11. பகுதி—எ யில் கொடுக்கப்பட்டுள்ளவைகளைப் பகுதி—பி யுடன் இணைக்கச் சரியான விடையின் எண்ணைப் பிறைக்கட்டில் எழுதவும்.

| பகுதி—எ | பகுதி—பி | |
|---|---|---|
| (1) Sovereignity | (அ) பாராளுமன்றம் | (   ) |
| (2) Parliament | (ஆ) நாடு | (   ) |

| | | | |
|---|---|---|---|
| (3) City States | (இ) இறைமை | ( | ) |
| (4) Executive | (ச) சட்டமன்றம் | ( | ) |
| (5) Legislative | (உ) செயற்குழு | ( | ) |
| (6) Judiciary | (ஊ) பொதுநல நாடு | ( | ) |
| (7) Welfare State | (எ) நீதித்துறை | ( | ) |
| (8) Constitution | (ஏ) செனெட் | ( | ) |
| (9) Senate | (ஐ) அரசியல் அமைப்பு | ( | ) |
| (10) State | (ஒ) நகர அரசுகள் | ( | ) |

12. பொருள் மாறாத வகையில் அடிக்கோடிட்டுள்ள சொற்களின் வடிவங்களை மாற்றி வாக்கியத்தை எழுதுக.

(1) ஆனால் இப்போது சமூகத்தின் ஒழுங்கிற்காக அதன் நலனுக்காக ஒருவன் ஒரு மனைவியுடன்தான் வாழவேண்டும் என்னும் சட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

(2) ஒரு குடும்பம் என்று குறிப்பிடும்பொழுது ஒழுங்கிற்கும், செல்வத்திற்கும், குடும்பத் தலைவனையும் குடும்பத்தினை அழகாகப் பரிபாலிக்கும் பொறுப்பை யுடைய குடும்பத் தலைவியையும் குறிப்பிடுகிறோம்.

13. அடைப்புக்குறிக்குள் கொடுத்துள்ள சொல்லை வாக்கியத்திற்குத் தகுந்தாற்போல மாற்றி பூர்த்தி செய்க.

(1) செயற்குழு அல்லது ஆட்சி மன்றம் என்பது ஓர் அரசாங்கத்தின் மற்றொரு முக்கிய————————. (உறுப்பு)

(2) இவற்றின் காரணமாகச் சட்டமன்றத்தின் பணிகள் நாளுக்குநாள்———————கொண்டே போகின்றன. (அதிகம்)

(3) ஆகையால் இவர்கள் தங்கள், பிரதிநிதிகளாக ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு——————————வைக்கின்றனர். (அனுப்பு)

(4) இப்பிரிவின் மூலமாக ஓர் அரசாங்கம் தன் நாட்டிற்கு வேண்டிய———— ஒரு நாடு இயற்றுகிறது (சட்டம்)

(6) இம்மாபெரும் பணியைச் செவ்வனே செய்து முடித்து, அந்நாட்டின் கண்ணுள்ள மக்கள் அமைதியுடனும் ஒற்றுமையுடனும் ——— —— அதற்கு அந்நாட்டின் முக்கிய பலங்களாக படை, பணம், மக்கள், ஒத்துழைப்பு இவைகள் தேவைப்படுகின்றன. (வாழ வேண்டும்)

(6) ஆயினும் சமூகத்தில் பயன்படும் அனைத்தையும்—— ———— ——முடியாது. (சட்டங்கள்)

(7) ஒரு நாட்டின் நான்கு உறுப்புக்களில் மிக முக்கியமானது இறைமை என்று முன்பே———— ———— (கூறு)

(8) இதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்றால், அரசியலில் உள்ள சில அடிப்படைச் சொற்களின் பொருள்களை———— ———அவசியமாகும். (அறி)

(9) இதைப் போன்று ஒரு சமூகத்திலுள்ள பல குடும்பங்கள் இனம் அல்லது ———— ————ஒன்றாக இணைந்து வாழ முடிகிறது. (மொழியின் காரணம்)

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்ச்சொற்களை வினைச்சொற்களாக மாற்றி ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு வாக்கியம் எழுதுக.

(உ-ம்) ஈடுபாடு : ஈடுபடு

(1) தொடர்பு :

(2) நடப்பு :

(3) முன்னேற்றம் :

(4) களிப்பு :

(5) படைப்பு :

(6) கண்காணிப்பு :

(7) குறிப்பு :

(8) தொகுப்பு :

(9) குறைப்பு :

(10) அமைப்பு :

# 25. ஒழுங்கைக் காக்கும் ஸைக்ளிக்

பாடக்குறிப்புகளை எழுதிக்கொள்ளுமிடம்

CONNEMARA PUBLIC LIBRARY
2 5 APR 1978
MADRAS

## கேள்விகள்

### பகுதி—ஏ

1. நமது உடலில் உயிர் வாழத் தேவையான சூழ்நிலை யாது ?

2. உயிர் செல்லின் அமைப்பு என்ன ?

3. செல்லின் ஒழுங்கு முறை என்றால் என்ன ?

4. புற்று நோய் பரவக் காரணமென்ன ?

5. திட்டம் காட்டும் மானகங்கள் அல்லது 'ரெகுலேட்டரி மாலிக்யூல்ஸ்' என்றால் என்ன ?

25 APR 1973
MADRAS

6. அட்ரினல் சுரப்பிகள் எப்பொழுது அட்ரினலின் என்ற ஹார்மோனைச் சுரக்கின்றன ?

7. சைக்ளிக் ஏ.எம்.பி. ஏன் தாக்குண்டு நாசமடைகிறது ?

8. பிறைக்கட்டில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களை நிரப்புக.

(1) செல்லின் ஒழுங்குமுறை எவ்வாறு நிலவ வேண்டும் என்ற திட்டத்தின் ஆதாரம் நூக்ளியஸ்ஸில் காணும் பரம்பரைப் பொருளான டி. என். ஏ. என்னும் பெரும்மாளகத்தில் பிறவியிலேயே எழுதப்பட்டிருக்கிறது. இந்த எழுத்தின்படி டி.என்.ஏ. தன் செய்திகளையும் கட்டளைகளையும் நிறைவேற்றி அரசாள, ஆர். என். ஏ. என்னும் தூதர் வழியாக என்ஸைம் என்னும் புரத மாளகங்களைச் சிருஷ்டித்து ———————————— பணியாட்களாக ஏவுகிறது. (இரத்தத்தைப் / என்ஸைம்களைப்)

(2) செல்களின் நடத்தையில் சில அற்புதமான ஒழுங்கு முறையைப் ———————————— நாம் பெற்றிருக்கிறோம். (பரிணாம கதியில் / பிறவியிலேயே)

(3) ஹார்மோன்கள் தம் தம் தொழிலை செம்மையாக்க, ———————————— என்ற சிறு மாளகத்தின் உதவியை நாடுகின்றன. (சைக்ளிக் ஏ. எம். பி. / ஏ. ஸி. டி. எச்.)

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளின் சரியான விடைகளுக்கு நேரே உள்ள உயிர் எழுத்துக்களைக் கேள்விகளுக்கு எதிரே உள்ள பிறைக்கட்டில் எழுதவும்.

(1) உடலில் காணும் ஒவ்வொரு காரியமும் எவைகளுனுடைய பலதரப்பட்ட ரசாயன மாற்றங்களின் கூட்டுறவால் நிகழ்கிறது ? (          )

(அ) டி. என். ஏ.

(ஆ) ஆர். என். ஏ.

(இ) செல்

(ஈ) என்ஸைம்

(2) குளூகோஸினால் ஏற்படும் பயன் என்ன ? ( )

(அ) உடல் நலத்தை அதிகரிக்கிறது.

(ஆ) வியாதியிலிருந்து காப்பாற்றுகிறது.

(இ) உடல் எதிர்பாராத அதிர்ச்சியை சமாளிக்க உதவுகிறது.

(ஈ) வியாதி வராமல் தடுக்கிறது.

## பகுதி –பி

11. கீழ்க்காணும் சொற்களிலிருந்து சரியான வாக்கியத்தை உருவாக்குக.

(1) செல்லின் ஒவ்வொரு கருவிக்கும் குறித்த பணி விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு—

(2) ஒவ்வொரு காரியமும் என்சைம்கள் நடத்தும் உடலில் காணும் கூட்டுறவால் நிகழ்கிறது பலதரப்பட்ட ரசாயண மாற்றங்களின்

(3) இல்லாதபொழுது பாஸ்பாரிலேஸ் தன் வேலையை நடத்தத் திறனில்லாத ஆட்ரினலீனின் தூண்டுதல் அசைவற்ற நிலையில் இருக்கிறது.

(4) தொடர்பை நீரிழிவு நோய்க்கும் இன்சுலீனுக்குமுள்ள நாம் அறிவோம்.

(5) இரத்தத்தின் அதிக அளவுடன் இந்தக் குளூகோஸ்தான் காணப்படுகிறது.

CONNEMARA PUBLIC LIBRARY
25 APR 1978
MADRAS

12. கீழே கொடுத்துள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

(1) சீர்+அமைப்பு = ________

(2) பயன்படுத்தி+கொள்கிறது = ________

(3) செம்மை+ஆக்க = ________

(4) வெளி+புறமாக = ________

(5) செயல்+ஆற்றல் = ________

(6) அதிர்ச்சி+ஐ+மட்டும் = ________

(7) ஓட்டம்+உடன் = ________

(8) விடை+அளித்துள்ளது = ________

(9) உருவம்+உடைய = ________

13. கீழே உள்ள வாக்கியங்களில் கோடிட்ட பகுதிகளை நீக்கிவிட்டுத் தகுந்த வினாச் சொற்களைப் போட்டுக் கேள்வி வாக்கியங்களை அமைக்கவும்.

(1) அதிர்ச்சியையூட்டும் வெளி எதிரியை எதிர்க்கவும் பாதுகாப்பு முறையை வகுக்கவும் மூளைக்கும் குளுகோஸ் தேவைப்படுகிறது.

(2) ஆட்ரினலீனின் தூண்டுதல் இல்லாதபொழுது பாஸ்பாரிலேன் தன் வேலையை நடத்தத் திறனில்லாத அசைவற்ற நிலையில் இருக்கிறது.

(3) ஆனால் ஆட்ரினலீன் ஈரல்செல் மெம்ப்ரேனுடன் கலந்த தருணத்தில், அசைவற்ற நிலையிலிருந்து பாஸ்பாரிலேஸ் திறன் படைத்த <u>அசைவுடைய நிலையை</u> அடைகிறது.

(4) இவ்வாறு திறன்பெற்ற பாஸ்பாரிலேஸ். க்ளைகோஜன் மாளகத்தைத் தாக்கி, குளுகோஸாகப் பிரிணமிக்கச் செய்கிறது.

(5) அமீபிக்டிஸன்டரி உண்டாகக் காரணமாக இருக்கும் அமீபா என்னும் கிருமி கூடத் தன் உருவமாற்றத்தில் ஸைக்ளிக் ஏ. எம். பி.யைப் பயன்படுத்திக் கொள்கிறது.

14. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்திச் சொந்தமாக ஒரு வாக்கியம் எழுதுக.

(1) ஹார்மோன்

(2) இரண்டறக் கலந்து

(3) அதிவேகமாக

(4) விஞ்ஞானிகளின் நோக்கம்

(5) தூண்டுவது